# நம் வழி வேளாண்மை

பருவம் 25 | ஜூலை – செப்டம்பர் 2015 | இதழ் 2



சவுக்கு சாகுபடியில் மறுதாம்பு பயிர் விடுவது விரைவில் பருமனாகும்
– எஸ்.ஆர். சுந்தராமன்

## இயற்கை வழி விவசாயிகள், மூலிகை வைத்தியர்கள் மற்றும் அடித்தள கண்டுபிடிப்பாளர்களின் குரலோசை

# நம்வழி வேளாண்மை

பருவம் 25 ஜூலை – செப்டம்பர் 2015 இதழ் 2

ஆசிரியர்
**பெ. விவேகானந்தன்**

**நம் வழி வேளாண்மை தத்துவம்**

தேனீக்கள் மலரை நாடிச் செல்கின்றன. மலருக்கு மலர் தாவி தேனை எடுக்கின்றன. தேனை எடுப்பதால் மலர் குறைபடுவதில்லை. மாறாக மலர் கருவுற்று காயாக, கனியாக துணை செய்கின்றன. தேனீக்களின் இந்த சேவையினால் மலரும் பயன் பெறுகின்றது. தனக்கும் பிறருக்கும் பயன்படும் தேனையும் அள்ளி சேகரிக்கின்றது. இந்த சேவை தத்துவத்தை பின்பற்றி நம்வழி வேளாண்மை ஒரு சிலரிடம் உள்ள உத்திகளையும் மற்றும் ஒரு பகுதியில் உள்ள பாரம்பரிய அறிவையும் எடுத்து வெளிக்கொணர்ந்து மற்றவர்களுக்கும் பிற பகுதிகளுக்கும் அறிமுகப்படுத்தி மேலும் உய்ய வழி வகுக்கின்றது.

**நம்வழி வேளாண்மை குழுமம்**
**பிற மொழி இதழ்கள்**

ஆங்கிலம் – தேனீ (Honey Bee)
குஜராத்தி – லோக் சர்வானி
ஹிந்தி – சூஜ் புஜ் ஆஸ் பாஸ்கி
ஒரியா – அமா அகாபகா
தெலுங்கு – பல்லி ஸ்ருஜானா
கன்னடம் – ஹித்தலகிடா
மலையாளம் – இனிகர்ஷகான்சம்சாரிகட்டே

**நம் வழி வேளாண்மை**
45, டி.பி.எம். நகர்,
விராட்டிபத்து, மதுரை – 625 016.
தொலை பேசி : 0452– 2380082, 2380943.
இமெயில் vivekseva@gmail.com

**ஆங்கில இதழ் முகவரி**

Prof. Anil Gupta,
**Honey Bee,**
Indian Institute of Management,
Vastrapur, Ahmedabad -380 015
email: honeybee@sristi.org
www.nifindia.org ; www.sristi.org

## உலக மண் ஆண்டில் கிடையை காப்போம்

2015 ஐ உலக மண் ஆண்டாக ஐ.நா சபை அறிவித்துள்ளது. மண்ணில் தாவரங்களும் பிற உயிரினங்களும் வாழ்வதற்கு ஓர் இடமாக உள்ளது. மண்ணில் தேவையான அளவு அங்கக பொருள் இல்லையெனில் மண்ணில் சத்து குறையும். மண்ணில் அங்கக பொருளை கூட்ட பயிர் சுழற்சி, பசுந்தாள் உரமிடுதல், கிடை போடுதல் போன்ற முறைகள் பாரம்பரியமாக கடைபிடிக்கப்படுகிறது. இதனால் மண்ணின் வளம் கூடும். இந்த இயற்கை முறைகளை அனுசரிக்கும் போது இரசாயன உரங்களை கனிசமாகக் குறைத்து விடலாம். இந்தியாவில் இரசாயன உரங்களை விவசாயிகள் சொற்ப விலையில் வாங்குவதற்காக மத்திய அரசு மாணியம் அளிக்கிறது. கடந்த ஆண்டில் மட்டும் ரூ.72,070 கோடி மாணியம் கொடுக்கப் பட்டுள்ளது. தற்சமயம் இரசாயன இடு பொருள்கள் இல்லாமலேயே விவசாயம் செய்யும்முறை பல விவசாயிகளால் கடைபிடிக்கப்படுகிறது. இவர்கள் இயற்கை உரம் தயாரிக்க கால்நடைகளின் எருவை நம்பியுள்ளனர். பாரம்பரியமாக கால்நடைகளை பராமரித்து வரும் கிடைகாரர்கள் விவசாய நிலங்களில் கிடை அல்லது பட்டி போட்டு இயற்கை உரத்தை அளிக்கின்றனர். இந்த கிடைகாரர்கள் பலர் ஒன்று சேர்ந்து 300–500 கால்நடைகளை சேர்த்து விவசாய நிலத்தில் இரவில் தங்க வைப்பர். கால்நடைகளின் சாணமும், மூத்திரமும் மண்ணில் கலந்து தேவையான அங்கக பொருளை கொடுத்து மண்ணின் வளத்தை கூட்டும். இதனால் இரசாயன உரங்களின் அளவை குறைக்கலாம். ஒரு ஏக்கரில் போடப்படும் யூரியா மூட்டைகளின் அளவை பாதியாக குறைத்து விட முடியும். ஆனால் இது போன்று பாரம்பரியமாக கிடை போடும் பாங்கினை அரசு இது வரை கண்டு கொள்ளவில்லை. இந்த ஆண்டு உலக மண் ஆண்டாக அறிவிக்கப்பட்டுள்ளதால் பாரம்பரியமாக கிடை போடும் முறைக்கு அரசு ஊக்குவிக்க வேண்டும். கிடை போடும் கிடைக்காரர்களுக்கு கால்நடைகளின் எண்ணிக்கை, எருவின் அளவு நிர்ணயத்து மானிய பணம் மற்றும் கிடைக்காரர்களுக்கு பல சலுகைகளை கொடுத்தால் கிடை போடும் பாரம்பரியம் அழிந்து விடாமல் பாதுகாக்கலாம். இதனை 5–12–2015 உலக மண் வள பாதுகாப்பு ஆண்டு தினத்தில் அரசு அறிவித்தால் மிகவும் பொருத்தமாக இருக்கும். – ஆசிரியர்

## கோவிந்தராஜின் கலப்புபயிர் சாகுபடி மூலம் வருடந்தோறும் வருமானம்

திருப்பூர் அவிநாசி தாலுகாவில் தண்டுக்காரம் பாளையம் கிராமத்தில் திரு. கோவிந்தராஜன் (39) 8 வது வரை படித்து விட்டு விவசாயம் செய்து வருகிறார். இவர் 2000 ல் சுபாஷ் பலேக்கர் விவசாய நிபுணரின் ஜீரோபட்ஜெட்ட வேளாண்மையில் பயிற்சி பெற்றுள்ளார்.



பின்னர் சத்யமங்கலம் சந்தரராமன் ஆலோசனைப்படி இயற்கை வேளாண்மை உத்திகளை அனுசரித்து வருகிறார். தன்னுடைய நண்பர் சக விவசாயி திரு. வேலுச்சாமியுடன் சேர்ந்து பசுமை பேராயம் (பசுமை வேளாண்மைப்படை) என்ற நஞ்சில்லா வேளாண் விளை பொருள் உற்பத்தியாளர்கள் சங்கம் ஒன்றை பதிவு செய்துள்ளார். இதில் 36 நபர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். ஒவ்வொரு உறுப்பினரும் தனது பண்ணையில் பல வகையான (குறைந்தது 4 வகை காய்கறி பயிர்கள்) காய்கறிகளை இயற்கை முறையில் உற்பத்தி செய்கின்றனர். சில நேரங்களில் காய்கறிகளுக்கு நல்ல விலை கிடைக்காமல் போவதுண்டு. அந்த சமயத்தில் காய்கறிகளை அனாதை இல்லம், ஆசிரமங்களுக்கு தானமாகக் கொடுத்து விடுகின்றனர். உறுப்பினர்கள் விற்கும் காய்கறியில் 1 கிலோவுக்கு ரூ.5 கமிஷன் எடுத்து கொள்கின்றனர். இந்த கமிஷன் தொகையை வைத்து நிர்வாகம் மற்றும் போக்குவரத்து செலவுகளுக்கு பயன்படுத்தி கொள்கின்றனர்.

### தென்னையில் அன்றாட வருமானம்

''நான் 150 குட்டை ஒட்டுரகத் தென்னை மரங்கள் 30 அடி இடைவெளியில் நட்டுள்ளேன். தற்சமயம் 3 வருடங்களாகி காப்பில் உள்ளன. நித்தமும் 5 மரத்திலிருந்து 100 இளநீர்க்காய்கள் வெட்டி ரூ.1200க்கு விநியோகிக்கிறேன். இது என் பண்ணையில் வேலை செய்பவர்களின் சம்பளத்திற்கு போதுமானது. இதை லேபர் ஏ.டி.எம். என்று கூறினால் மிகையாகாது. 30 நாளில் ஒரு நாளைக்கு 150 மரங்கள் வெட்ட சரியாகக் கணக்கு வரும். காய்கறிப்பயிர்களான் சுரைக்காய், வெண்டை, பச்சைமிளகாய், தக்காளியில் வார வருமானமும், மாத வருமானமும், மஞ்சள், கரும்பிலிருந்து ஆண்டு வருமானமும் கிடைக்கும். மரங்கள் வைப்புத் தொகை முதலீடாகும். (5–15 வருடங்களில் நல்ல வருமானம் தரும்)'' என கூறுகிறார். இவர் தனது 9 ஏக்கர் பண்ணெயில் 1 போர் (1200 அடி ஆழம்) போட்டு சொட்டு நீர்பாசனம் செய்து வருகிறார்.

### பனம்பழக்கரைசல்

100 லிட்டர் பேரலில் 50 பனம்பழங்கள், 20–30 லிட்டர் கோமியம் ஊற்றி 7 நாட்கள் ஊற வைக்க வேண்டும். இதிலிருந்து 1 லிட்டர் கரைசலுக்கு 10 லிட்டர் நீர் சேர்த்து பயிருக்கு தெளிக்க பயிர் வளர்ச்சி அபாரமாகக் கூடும்.

### எருக்கன் கரைசல்

ஒரு பேரலில் எருக்கன் 20 கிலோவுடன் 20 லிட்டர் மாட்டு கோமியம் 150 லிட்டர் நீர் சேர்த்து 21 நாட்கள் ஊற வைக்க வேண்டும். பின்னர் இதிலிருந்து 1/2 லிட்டர் கரைசலை எடுத்து 10 லிட்டர் நீரில் சேர்த்து பயிருக்குத் தெளிக்க பூச்சி கொல்லியாக செயல்படும்.

### வைரஸ்நோய்க்கு கரைசல்

பெருங்காயம் 1/2 கிலோ, மஞ்சள்தூள் 1/2 கிலோ, தனித்தனியாக எடுத்து 10 லிட்டர் மோர் நீர் கலந்து ஊற வைக்க வேண்டும். இதில் சூடோமோனாஸ் 1/2 கிலோ சேர்த்துக் கொள்ளலாம். இதனை 2 நாட்கள் ஊற வைத்து இந்த கரைசலை 1 சத அளவு தெளித்தால் பயிர்களில் காணப்படும் வைரஸ் நோய் (வெளுத்த நிறத்தில் பயிர் காணப்படும்) கட்டுப்படும்.

### வேப்பங்கொட்டை கரைசல்

வேப்பங்கொட்டைதூள் 1 கிலோவை 20 லிட்டர் மாட்டு கோமியத்தில் 7 நாட்கள் ஊற வைத்து இந்த கரைசலை 1லிட்டர் நீரில் 100 மி.லி வீதம் கலந்து தெளிக்க பூச்சிகள், வைரஸ்நோய் கட்டுப்படும்.

### பூச்சி மருந்து தெளிக்க நகரும் கருவி

பப்பாளி போன்ற மரப்பயிருக்கு பூச்சி மருந்து தெளிக்க உயரமான ஹோஸ் வைத்து தெளிக்க வேண்டும். இதற்கு

பூச்சி கொல்லி கரைசல் தொட்டியை ஆங்காங்கே நகர்த்துவது சிரமம். இந்த வேலைக்கு ஆண் கூலியாட்கள் தான் தேவைப்படுவர். இதற்கு எளிதாக பெண்களை வைத்தே இயக்கும் கருவியை கோவிந்தராஜ் உருவாக்கியுள்ளார். படத்தில் காட்டியபடி 2 சக்ர வாகனத்தில் பேரலை உட்கார வைத்து 1/2 ஹெச்பி மோட்டார் மூலம் கரைசல் உறிஞ்சப்பட்டு உயரமான பகுதியில் தெளிக்கப்படுகிறது. 1 மணிக்கு 1லிட்டர் பெட்ரோல் தேவை. 20 டாங்குகள் அடித்துவிடலாம். அதாவது 1– 11/2 மணியில் 1 ஏக்கர் தெளிக்கலாம்.



**மஞ்சளில் ஊடுபயிர்**

மஞ்சள் பயிரில் ஒரு பாரில் 2 வரிசை மஞ்சள் சாகுபடி செய்கிறார். மஞ்சளில் முதல் ஊடு பயிராக வெங்காயம் சாகுபடி செய்கிறார். வெங்காயம் அறுவடையானதும் நரிப்பயிர் விதைத்து விடுகிறார். இதனால் நரிப்பயிர் வளர்ந்து களைச்செடியை முளைக்க விடாமல் செய்கிறது. மஞ்சள் நிழல் அதிகமாயிருப்பதால் நரிப்பயிர் காய்ப்பது இல்லை. இதனை மாட்டுத் தீவனமாக அறுவடை செய்து கால்நடைகளுக்கு இடலாம். மஞ்சள் பயிரின் வேலியில் மிளகாய், சேப்பங்கிழங்கு 7 அடிக்கு ஒன்றாக பயிர் செய்யப்படுகிறது. இதில் குண்டு மிளகாய், நீளமிளகாய் இரண்டும் பயிர் செய்யப்படும்.

கோவிந்தராஜ்
2/49, ரைஸ்மில் தோட்டம்
தண்டுக்காரம்பாளையம் அஞ்சல்
அவிநாசி தாலுகா –641655
திருப்பூர் மாவட்டம்
செல் –9965537403

## தன்ராஜின் மரவள்ளி கிழங்கு அறுவடை செய்யும் கருவி

நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தாலுகா, பெரியப்புகாடு கிராமத்தில் தன்ராஜ் (75) வசித்து வருகிறார். இவர் இளம் வயது முதலே விவசாயத்திலும் விவசாய கருவிகளை உருவாக்குவதிலும் ஆர்வமாக ஈடுபட்டு வருகிறார்.மேலும் மற்ற விவசாய நண்பர்களுடன் சேர்ந்து விவசாய கருவிகளை உருவாக்குவதிலும் ஈடுபாடு அதிகம். மரவள்ளி சிப்ஸ் வெட்டும் கருவிக்கு தேசிய கண்டுபிடிப்பு அறக்கட்டளையின் விருது 2014 ல் ஜனாதிபதி மாளிகையில் பெற்றுள்ளார்.

கருவி உருவான விதம் :

கடந்த ஆண்டிலிருந்து மரவள்ளி கிழங்கில் தயாரிக்கப்படும் ஜவ்வரிசி கலப்படத்தாலும், வெள்ளை நிறம் வேண்டி சல்பியூரிக் மற்றும் ஹைட்ரோ குளோரிக் அமிலத்தை பயன்படுத்தி தயாரிக்கப்படுவதாலும் வட இந்தியாவில் இதன் விலை கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால் மரவள்ளி கிழங்கு



விலை குறைந்து கிலோ ரூ.2 க்கும் கீழ் குறைந்துள்ளது. மரவள்ளி கிழங்கு பயிரிட்டவர்கள் மொத்தமாக விற்பனை செய்யும் போது நஷ்டத்தை சந்திக்க வேண்டியுள்ளது. இதனால் கிழங்கை சில்லரையாக உழவர் சந்தை மற்றும் உள்ளூர் சந்தையில் விற்பனை செய்ய முற்பட்டுள்ளனர். அப்படி சில்லறையாக விற்பனை செய்யும் போது 1 மூட்டையோ அல்லது இரண்டு மூட்டையோ போதுமானது. ஒரு மூட்டை பிடுங்கி விற்றால் அதன் வருமானம் கூலி ஆட்களுக்கு சென்று விடுகிறது. இதனை சரி செய்ய உற்பத்தியாளர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்த இயந்திரம் உருவாக்கப்பட்டுள்ளது.

### கருவியின் செயல்பாடு

இது லிவர் டைப்பில் இயங்கும். இது கிழங்கு குச்சியின் அடிப்பாகத்தை இறுகப்பிடித்து கொள்ளும். அதன் பிறகு நீண்ட லிவரை மேலும் அழுத்தும் போது கிழங்கு மண்ணை விட்டு இலகுவாக வெளிவந்து விடும். மண்ணை அழுத்தும் பகுதி செடிகே சற்று தூரத்தில் இருப்பதால் கிழங்கு அறுபடுவது மிகவும் குறைவு. இதன் எடை மிகவும் குறைவு. இயக்க எளிதாக இருப்பதால் ஒரு பெண் கூலி ஆள் கூட இயக்கலாம். இதில் பயன்படுத்தும் விசை செடியின் மிக அருகாமையில் செயல்படுவதால் எந்திர லாபம் 100 சதவீதம் கிடைக்கின்றது. இதன் அமைப்பு மிகவும் எளிமையானது. உள்ளூர் பட்டறையிலேயே யார் வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம்.

இந்த இயந்திரத்தால் தேவைக்கு ஏற்ப 45 கிழங்குகளை அவ்வப்போது பிடிங்கி மார்க்கட்டிற்கு எடுத்துச் சென்று சில்லரை விற்பனைக்கு ஏதுவாக்கி கொள்ளலாம். மேலும் இந்த இயந்திரம் தயாரிக்கப்படும் செலவு ஒரு நாள் வேளையாட்களுக்கான கூலியாகும். இதனை பயன்படுத்தி ஒரு கூலி ஆள் 75–100 மூட்டை கிழங்கு விரை பிடுங்கலாம்.

ஆர். தன்ராஜ்
பெரியப்புகாடு
கல்குறிச்சி அஞ்சல் , சேந்தமங்கலம் தாலுகா
நாமக்கல் – 637 402
செல் – 9443469132

தொகுப்பு– பி. மகேஷ்வரன், சேவா

## வேலுச்சாமியின் உயிராற்றல் பண்ணை



திருப்பூர் மாவட்டம் அவிநாசி தாலுகா தண்டுக்காரன் பாளையம் கிராமத்தில் திரு.வேலுச்சாமி (34) 10 வது வகுப்பு வரை படித்து விட்டு பிளம்பிங் பணியில் வேலை பார்த்து வந்தார். தற்போது தனது சொந்த ஊரிலேயே இயற்கை வேளாண்மையை கடைபிடித்து வருகிறார். இவர்தான் முதன்முதலில் காலிபிளவரை இப்பகுதியில் வெற்றிகரமாக பயிர் செய்துள்ளார். பிளாஸ்டிக் மூடாக்கு முறையில் காலிபிளவர், வெண்டை பயிர் செய்கிறார். அதாவது ஜிக்ஜாக் முறையில் 3 அடிக்கு 1 காலிபிளவர் 11/2 அடியில் வெண்டையை (முக்கோண முறை) பயிர் செய்துள்ளார். இதில் டிரிப் மூலம் சொட்டு நீர் விடப்படுகிறது. பிளாஸ்டிக் மூடாக்கு முறையில் குறைந்தது 3 போகம் பயிர் சாகுபடி செய்ய முடிகிறது. இதனால் குறைந்த நீர் கொண்டு தண்ணீர் பாய்ச்ச கூலி ஆள் இல்லாமலேயே வேளாண்மை செய்யலாம். இவர் நாட்டு புடலங்காய், அவரைக்காய், வெண்பூசணி போன்ற பல வகையான காய்கறி செடிகளை பயிர் செய்து வருகிறார்.

### சொட்டு நீர் பாசன குழாய்க்கு திரவ உரம்

இவர் சத்தியமங்கலம் சுந்தரராமனின் யோசனைப்படி பயிர் , மண் பாதுகாப்பு திரவத்தை தொட்டியில் தயார் செய்கிறார். (இயற்கை முறை திரவ உர பாதுகாப்பு கரைசல் தயாரிக்கும் விதம் நம் வழி வேளாமை பருவம் 23 இதழ் 2 பக்கம் 16ல் கொடுக்கப்பட்டுள்ளது). பின்னர் இந்த கரைசல் வடிகட்டப்பட்டு மற்றேரு தொட்டிக்கு வரும். இந்த கரைசல் ஒரு சிறு குழாயில் உறிஞ்சப்பட்டு கிணற்று நீர் குழாயுடன் கலந்து விடும். ஒரே மோட்டார் மூலம் கிணற்று நீரும் கரைசல் நீரும் உறிஞ்சப்படுமாறு புது உத்தியை கடைபிடித்துள்ளார். இதனால் சொட்டு நீரில் இயற்கை திரவ கரைசல் கலந்து செல்லும் .




வி. வேலுச்சாமி , உயிராற்றல் பண்ணை
2/227, நீலித் தோட்டம் , தண்டுக்காரன்பாளையம்
சேவூர் வழி ,அவினாசி தாலுகா
திருப்பூர் மாவட்டம் – 641655, செல் –9842553068

## சுந்தரராமனின் வேளாண்மை உத்திகள்

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் சுந்தரராமன் அவர்களின் இயற்கை வேளாண்மை சாகுபடி முறைகளைப்பற்றி நம் வழி வேளாண்மை பருவம் 23 இதழ் 2 ல் பிரசுரித்திருந்தோம். இவர் பண்ணையில் இவர் கூறும் மேலும் சில அனுபவங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**சவுக்கு சாகுபடியில் மறுதாம்பு விடுதல்**

(அட்டைபட உத்தி)



சவுக்கு மரம் நட்ட 4–7 வருடங்களில் காகித ஆலைகளுக்கு வெட்டப்படுகின்றன. வெட்டிய பின்பு மீண்டும் சவுக்கு சாகுபடி செய்ய விவசாயிகள் சவுக்கு மரக்கன்றுகளைத் தருவித்து அதே இடத்தில் நடவு செய்கின்றனர். சவுக்கை மறுதாம்பு பயிராக சாகுபடி செய்தால் நல்ல வளர்ச்சியும், எடையும் கிடைக்கும். சவுக்கு மரம் வெட்டப்பட்ட அடிப்பகுதியிலிருந்து (வேர் பகுதியிலிருந்து) வரும் பக்க கன்று ஒன்றை மட்டும் மீண்டும் வளரவிட்டு பார்த்ததில் சாதாரணமாக நடப்பட்ட கன்றை விட நல்ல பருமனும் (3 மடங்கு அதிகமாக) உயரமும் கொண்டதாகத் திகழ்கிறது (படத்தில் காட்டப்பட்டுள்ளது) . எனவே மறுதாம்பு பயிர் சாகுபடியினால் சவுக்கு மரக்கன்றுகளை 3 வருடத்தில் வெட்டி நல்ல விலைக்கு விற்கலாம். சவுக்கு மரம் சாகுபடி நிலத்தில் சவுக்கமர இலைகள் கொட்டி நிலத்தில் மண்ணுக்கு நல்ல மூடாக்கையும், அங்ககப் பொருளையும் தருகிறது.

**மலைவேம்பு சாகுபடி**

மலைவேம்பு மரங்கள் காகித ஆலைகளுக்காக வெட்டுவதற்கு வளர்க்கப்படுகின்றன. சவுக்கை விட வளர்ச்சி கூடுதலாகவும், பருமனும் கொண்டு இருந்தாலும் எடை அளவில் சவுக்கைவிட குறைவாக உள்ளது. இதனால் விலை டன்னுக்கு ரூ. 1000 குறைந்தே காணப்படும். மலை வேம்பை 4 வருடங்களில் வெட்டினால் சாப்ட்வுட்டாக காகித அலைகளுக்கு வெட்டலாம். 7–8 வருடங்கள் வளர்த்தால் மலைவேம்பை டிம்பர்க்கு (மரவேலைகளுக்கு) பயன்படுத்தலாம் என கூறுகிறார்.

**மூலிகை எண்ணெய், கரைசல் நன்கு கரைய**

பயிர்களுக்கு பூச்சிவிரட்டும் தன்மையைக் கொண்ட வேப்பஎண்ணெய், புங்க எண்ணெய்யை பயன்படுத்தும் சமயம் நீரில் கரையாமல் திரள் திரளாகக் காணப்படும். இதற்கு காதிசோப் சேர்ப்பது வழக்கம். ஆனால் எவ்வளவு அளவு விகிதம் என்பது சரியாக அனுபத்தில் தான் தெரியும். இதற்கு பதில் சோப் ஆயில் (soap oil) கடையில் கிடைக்கும். இதை 1 லிட்டர் மூலிகை எண்ணெய் அல்லது பூச்சி மருந்து கரைசலுக்கு 200 மி.லி வரை சேர்த்து நன்கு கலந்து தெளிக்க வேண்டும்.

**மூலிகைபூச்சி கொல்லியின் வீரியம் கூட்ட**

மூலிகைபூச்சி விரட்டி தெளித்தும் கூட சில நேரங்களில் பயிர்களில் பூச்சிகளின் தாக்குதல் முழுவதும் குறையாமலிருக்கும். மூலிகைபூச்சிக் கொல்லியின் வீரியத்தைக்கூட்ட ஆட்டு கொட்டகையில் கோமியம் ஊறிய மண்ணை சிறிது எடுத்து கரைசலில் சேர்த்து விட வேண்டும். ஓர் இரவு வைத்திருந்து பின் தெளிக்க வீரியம் கூடி பூச்சி தாக்குதலை வெகுவாகக் குறைத்து விடலாம்.

**எறும்பு மூலம் பரவும் அசுவினி பூச்சிகளுக்கு**

பருத்தியில் எறும்பு மூலம் சில பூச்சிகள் குறிப்பாக சாறு உறிஞ்சும் பூச்சிகள், அசுவினிகள் பரவி பயிருக்கு சேதாரத்தைக் கொடுக்கும். இதற்கு 10 கிலோ சாம்பலுடன் வேப்பஎண்ணெய் 1 லிட்டர் (200 மி.லி. சோப் ஆயில் சேர்க்கப்பட்டது) கலந்து ஓர் ஏக்கருக்கு துவினால் எறும்பு, அசுவினி தொல்லைகளிலிருந்து விடுபடலாம்.

**நிலங்களில் களைச்செடியை ஒழிக்க**

வாழை, மரப்பயிர், மஞ்சள் சாகுபடி செய்யும் சமயம் ஊடு பயிராக நரிப்பயறு விதைகளை விதைத்துவிட களைச்செடிகள் பிரச்சனை வராது. மஞ்சளில் வெங்காயம் முதல் 3 மாதங்கள் சாகுபடி செய்வதாலும் அதற்குப் பின்னர் நரிப்பயிறு விதைப்பதாலும் களைப்பயிர்கள் உண்டாவதில்லை.

**நுண்ணியிர்க்கலவையை பாதியாகக் குறைத்தல்**

இயற்கை வேளாண்மையில் மண்ணுக்கு நன்மை செய்யும் நுண்ணியிர்கள் மற்றும் பூச்சி நோய் கட்டுப்படுத்தும் நுண்ணியிர்கள் பயன்பாட்டில் உள்ளன. இந்த நுண்ணியிர் கலவையை சாதாரணமாகப் பயன்படுத்தப்படும் அளவில் பாதியாகக் குறைக்கும் ஓர்

எளிய முறையை திரு. சுந்தரராமன் எடுத்துரைக்கிறார். முதலில் தொல்லுயிர் பாக்டீரியா, கரைசலை (மாட்டு கோமியம், வெல்லாம், கடுக்காய், அதிமதுரம், பப்பாளிபழம் சேர்த்து காற்று போகாமல் மூடி வைத்து தயாரித்த கலவை – நம் வழி வேளாண்மை பருவம் 23 இதழ் 2 பக்கம் 16 ல் கூறப்பட்டுள்ளது) தயார் செய்து அதில் பழுத்த பழக்கலவை சேர்த்து பின்னர் இதில் சூடோமோனாஸ் (4 கிலோ), பேசில்லஸ் (4 கிலோ) , மெட்டாரைஸம், வெர்ட்டிசிலியம் போன்றவற்றை சேர்த்து ஓர் இரவு வைக்க வேண்டும். இதில் இந்த நுண்ணுயிர்கள் விரைவில் பெருக்கமடையும். இதனால் பாதியளவு நுண்ணுயிர்க்கலவையை பயன்படுத்தினால் போதுமானது. இந்தக்கலவையை மக்கிய குப்பையுடன் சேர்த்து வாழைக்கு அடியுரமாகக் குழியில் இட்டால் அழுகல் நோய் தாக்காது. தென்னைக்கு தண்ணீர்பாயும் வட்டத்தில் 4 அடி விட்டு இதனை இடுவதால் வேர்களால் உறிஞ்சப்பட்டு சிவப்பு கூன்வண்டினைக் கட்டுப்படுத்தும். இதனால் மோனோ குரோட்டாபாஸ் போன்ற இரசாயனப் பூச்சிக்கொல்லி மருந்துகளைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படாது.

இந்த முறையைப் பயன்படுத்தி வாழை பயிரிட்டு பயன் பெற்றவர் வேலூர் ஹரிராஜன் (9786225084 )ஆவார். இவர் ஒரு முறை மஞ்சள் இயற்கை முறையில் சாகுபடி செய்து விலை வீழ்ச்சியடைந்த சமயத்திலும் குவிண்டால் ரூ.12,200க்கு விற்றுள்ளார். இவர் தமிழ்நாடு வேளாண்மைத் துறையில் அங்ககக வேளாண்மை விவசாயியாக பதிவு செய்துள்ளார்.

திரு.சுந்தரராமன், கோம்புபள்ளம் தோட்டம்
சத்தியமங்கலம், கெஞ்சனூர் வழி,
ஈரோடு மாவட்டம்– 638 401, செல்:9842724778

**வெங்காயம் சேமிக்கும் எளிய முறை**



முழு விவரம் பக்கம் 19 ல் உள்ளது ..........

## மண்புழுக்கள் உற்பத்தி, பார்சல் செய்வதில் புதிய முறை



மண்புழுக்கள் மூலம் இயற்கை உரம் தயாரிப்பது தற்சமயம் பலரும் தெரிந்துள்ளனர். ஆனால் ஓரிடத்திலிருந்து வேறு ஊருக்கு மண்புழுவை கொண்டு செல்லும் சமயம் புழுக்கள் கொண்டு செல்லப்படும் பை அல்லது தட்டிலிருந்து வெளியேறி விவசாயிகளுக்கு நஷ்டத்தைக் கொடுக்கும். எனவே போக்குவரத்தில் மண் புழுக்களை சேதாரமாகமல் கொண்டு செல்லும் ஒரு புதிய வழி முறையை சத்தியமங்கலம் பகுதியில் உப்புபள்ளம் ரவி முறைப்படுத்தியுள்ளார்.

உப்புபள்ளம் ரவி 6 வது வரை படித்து விட்டு விவசாயம் செய்து வருகிறார். சொந்தமாக 4 1/2 ஏக்கர் நிலமும் கிணறு பம்புசெட் வசதி உள்ளது. இவர் யூட்ரிலஸ் என்ற வெளிநாட்டு இன மண்புழுக்களை உற்பத்தி செய்து வருகிறார். இவரிடமிருந்து கர்நாடகா, கேரளா, தமிழக விவசாயிகள், கம்பெனிகள் மண்புழுக்களை வாங்கி செல்கின்றனர். மாதத்திற்கு சுமார் 40 தட்டுக்கள் விநியோகிக்கின்றார். ஒரு பிளாஸ்டிக் தட்டில் சுமார் 5000 சிறு மண்புழுக்களை உற்பத்தி செய்யலாம். சுமார் 1x1/2 அடி நீள அகலமுள்ள பிளாஸ்டிக் தட்டு (Plastic Tray) கடையிலிருந்து வாங்கி அடிப்பகுதியில் சிறு துவராங்களிட வேண்டும். பின் இதில் குப்பையை நிரப்பி ஒரு தட்டில் சுமார் 40 சிறு மண்புழுக்களை விட வேண்டும். இதனை கம்பிசட்டம் கொண்டு தயாரிக்கப்பட்ட அலமாரியில் அடுக்கி விட வேண்டும். இதற்கு அவ்வப்போது சாணி, பிண்ணாக்கு பப்பாளிபழக்கூழ் தயாரித்த கரைசலை தெளித்து வருவது சிறந்த போஷாக்காகும். இதில் அதிகப்படியாக

நீர் இருந்தால் தட்டின் கீழேயுள்ள துவாரம் வழியாக வெளியேறிவிடும். இந்த கரைசலை வெர்மிவாஸாக சேகரித்தும் பயிருக்குத் தெளிக்கலாம். 3 மாதத்தில் மண்புழுக்கள் தயாரிகிவிடும். இதில் சுமார் 5000 புழுக்கள் இருக்கும். இதனை ரூ. 1,500 க்கு விலைக்குத் தருகிறார். இந்த தட்டை மெல்லிய துணியால் வண்டுகட்டி காரில் அல்லது வாகனத்தில் வைத்து எளிதில் கொண்டு செல்லலாம். போக்குவரத்து காலமான 5–6 நாள் வரை எந்த சேதாரமின்றி எங்கும் எளிதில் எடுத்து செல்லலாம்.

மண்புழு முட்டைகளை அடையாளம் பார்த்து அதிலிருந்து 30 நாட்களில் ஒரு முட்டையிலிருந்து 5–6 குஞ்சுகள் வெளி வருவதையும் கவனித்துள்ளார். ரவியும் இவரது துணைவியரும் தனது தோட்டத்தில் இயற்கையாக விளைந்த தேங்காய்களை சேகரித்து செக்கில் எண்ணெய் ஆட்டி இயற்கை தேங்காய் எண்ணெய் மற்றும் கூந்தல் தைலம் தயார் செய்து விற்பனை செய்து வருகின்றனர்.

வி. ரவி, உப்புபள்ளம், கெஞ்சனூர் அஞ்சல்
சத்தியமங்கலம் தாலுகா
ஈரோடு மாவட்டம்
செல் ; 9443724779

தொகுப்பு : பெ.விவேகானந்தன்

## சபாபதியின் இளநீர் பறிக்கும் கருவி



நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தாலுகா, கல்குறிச்சி ஈஸ்வரன் கோவில்காடு கிராமத்தில் திரு. சபாபதி (65) வசித்து வருகிறார். இவர் முதுகலை பட்ட படிப்பு வரை படித்து விட்டு விவசாயம் செய்து வருகிறார். இவருக்கு சிறு வயது முதலே விவசாயத்தில் ஈடுபாடு அதிகம். மேலும் நண்பர்களுடன் சேர்ந்து ஏதாவது புது விவசாய நுட்பங்கள் மூலம் வருமானம் தரும் வழிகளிலும் மூலிகை வைத்யத்தை கடைபிடிப்பதிலும் ஆர்வமுடன் செயல்படுகிறார்.

கருவி உருவான விதம்:

தென்னந்தோப்பில் மழை காலங்களில் மரத்தில் ஏறுவது மிகவும் சிரமமாக இருந்தது. மேலும் மரம் ஏறுபவர்களுக்கான கூலியும் அதிகம். இந்த பிரச்சனைகளை போக்கவே இவர் இளநீர் பிடுங்கும் கருவியை உருவாக்கியுள்ளார்.

கருவியின் செயல்பாடு:

இந்தக்கருவியானது சுமார் 10 அடி நீளம் கொண்ட மூங்கில் குச்சிகள் 3 வைத்து ஒன்றிணைக்க இரும்புக்குழாய்கள் போல்ட் போட்டு இணைக்கப்பட்டுள்ளன. இது வேகமாக இளநீரை பிடுங்கும்போது கம்பு உடைவதிலிருந்து பாதுகாக்கிறது. மேலும் கம்பின் முனையில் கத்தி பொருத்தப்பட்டுள்ளது. இது காய்களை அறுப்பதற்கு பயன்படுகிறது.

கருவியின் பயன்பாடு:

இந்தக்கருவியினால் மரத்தில் ஏறாமலேயே இளநீர், பாக்கு மற்றும் தேங்காய்களை பிடுங்கலாம். ஒரு பெண் வேலையாள் கூட இதனை பயன்படுத்தி இளநீர் மற்றும் தேங்காய்களை பிடுங்கலாம். மழைக்காலங்களில் இளநீர் பறிப்பது சுலபமாகும்.

பி.கே. சபாபதி, த/பெ. கந்தசாமிக்கவுண்டர்,
ஈஸ்வரன் கோவில்காடு, கல்குறிச்சி அஞ்சல்
சேந்தமங்கலம் தாலுகா, நாமக்கல் மாவட்டம்
தன்ராஜ் செல் – 9443469132 (பிபி)

## இட்லிப்பூவில் வேர் அழுகல் நோயை எதிர்க்கும் புதிய ஒட்டு ரகம்

எனது பெயர் தர்மராஜன், வயது 46 நான் எனது மனைவி மற்றும் மூன்று குழந்தைகளுடன் திருச்சிராப்பள்ளியிலிருந்து 12 கீ.மீ தொலைவிலுள்ள கோப்பூ எனும் ஊரில் வசித்து வருகிறேன். நான் சிறு வயதில் இருந்தே விவசாயம் சம்பந்தமான வாழை, கரும்பு, காய்கறிகள் மற்றும் பூக்கள் உற்பத்தியில் சிறிது அனுபவம் உள்ளது. நான் இட்லி பூவில் வேர் அழுகல் நோயை ஒட்டுதல் மூலம் குணபடுத்த முடியும் என்பதை நிரூபித்துள்ளேன். இட்லி பூ பாரம்பரிய பூ வகை ஆகும். 16 நூற்றாண்டுகளாக ஸ்ரீரங்கம் ரங்கநாதர்

கோவிலுக்கும் திருமணங்களில் போடப்படும் ஆண்டாள் மாலைகளுக்கும் பயன்படுத்தப்படுகிறது. 25 ஆண்டுகளுக்கு முன் திருச்சிராப்பள்ளியில் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் இட்லி பூ சாகுபடி தொடங்கியது. சில வருடங்களுக்கு முன் 95 விழுக்காடு பூந்தோட்டங்கள் தெரியாத நோய்களால் அழிந்தன. இதனால் விவசாயிகளுக்கு பெரும் நட்டம் ஏற்பட்டது. எனது தோட்டத்தில் செடிகள் சாகவும் நான் சிறுகமணியில் உள்ள வேளாண் அறிவியல் நிலையம் மற்றும் அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரியில் சோதனை செய்து பார்த்தேன். அது அழுகல் நோய் என கண்டுபிடிக்கப்பட்டது. எனவே நான் அந்த நோய்க்கு தீர்வு கானும் முடிவுக்கு வந்தேன். இந்த நோய் மண்ணில் உள்ள கிருமிகளால் பரவுவதால் ஒட்டுதல் மூலம் இதை சரி பன்ன முடியும் என நம்பினேன். மித வெப்ப மண்டலங்களில் அதிகமாக காணக் கூடிய மற்றும் செழிப்பாக வளரக் கூடிய வெள்ளை இட்லி பூவுடன் இனப்பெருக்கம் செய்ய நினைத்தேன். வெள்ளை இட்லி பூவில் வேர்கள் தடிமனாகவும் அழுமாகவும் இருக்கும். இதனால் வெள்ளை இட்லி பூவை வேர் பகுதியாகவும் சிவப்பு இட்லி பூவை தண்டு பகுதியாகவும் வைத்து ஒட்டு கட்டுதல் தொழில் நுட்பத்தை செய்தேன். எனது தோட்டத்தில் 15–20 ஒட்டு கட்டிய நாற்றுகளை தயார் செய்து பராமரித்தேன். ஒட்டுகட்டப்பட்ட அனைத்து செடிகளும் வேர் அழுகல் நோயிலிருந்து தங்களை பாதுகாத்து கொண்டன. மேலும் 40 விழுக்காடு அதிக பூங்கொத்துகளும், அதிக பூவிதழ்களும் ஒட்டு ரக இட்லி பூவில் காணப்பட்டன. வேரின் நீளம் 30 செ.மீ அளவுக்கு நீண்டு காணப்பட்டது. வேளாண் விஞ்ஞானிகள் எனது தோட்டத்தை சோதனை செய்வற்காக பார்வையிட்டனர். அவர்கள் கூறும் போது, இதில் அதிக பூங்கொத்துக்கள் (15–20) சிவப்பு இட்லி பூவை காட்டிலும் அதிகமாக காணப்பட்டன என்றும் சீக்கிரமாகவே பூக்க துவங்கி விடுகிறது (3–4 மாதம் முன்னேர) என்று கூறினார்கள். மேலும் பச்சையத்தின் அளவும் (80 மி.கிராம்/ ஒரு கிராம் எடை ) அதிகமாக காணப்படுவதாகக் கூறினார்கள்.

ஆர்.எம். தர்மராஜன்
த/பெ. ஏ.ஆர். மாணிக்கம்
5/32, பி.டி.ஆர் இல்லம்
அயிலபேட்டை
கோப்பு அஞ்சல்
திருச்சிராபள்ளி – 639 103
செல் – 9344177662

## பட்டுச்சேலைக்கு பாலிஸ் மிஷின்

(அயன்பன்ன / இஸ்திரிபெட்டி போட தேவையில்லை)



தேனி மாவட்டம் கம்பத்தில் திரு.ஜாபர் அலி (55) வசித்து வருகிறார். இவர் 8 ம் வகுப்பு வரை படித்துள்ளார். இவர் கடந்த 30 வருடங்களாக பட்டுச் சேலை டிரைவாஷ் தொழிலில் ஈடுபட்டு வருகிறார். இவரது தொழிற் நுட்ப கண்டுபிடிப்பு பின்வருமாறு.

இயந்திரத்தின் முக்கிய பாகங்கள் :

ரப்பர் சக்கரங்கள் – 4, சேலையை டைட் பண்ணும் கிளிப் – 10 எண்ணம், பிவிசி பைப் – 30 எண்ணம், எம்.எஸ் ரோடு – 30 எண்ணம், எல் ஆங்கிள் – 25, வலை – 1, ஸ்டேண்டு – 8 பிரேம் – 4 , ஸ்டார்ச் பவுடர் – 50கிராம், தண்ணீர் – 5லிட்டர்.

வேலை செய்யும் விதம் :

பட்டுச் சேலையை எடுத்து 5 லிட்டர் தண்ணீரில் 50 கிராம், ஸ்டார்ச் பவுடர் சேர்த்துக் கொண்டு பின்னர் பட்டுச் சேலையில் தண்ணீரை தெளிக்கவும். பின்னர் எம்.எஸ் ராடு பைப்பின் வழியாக முழுவதும் சொருகி பைப்பை டைட் செய்து சுமார் 15 நிமிடங்கள் வெயிலில் வைக்கவும். பின்னர் பைப்பை ஒவ்வொன்றாக எடுக்கும் போது பட்டு சேலை அயன் செய்தது போல வெளியே வரும்.

இக்கருவியைக் கொண்டு எல்லா வகையான பட்டுப்புடவைகளையும் டிரைவாஷ் செய்யலாம்.

இயந்திரத்தின் எடை 50–60 கிலோ ஆகும். பட்டுச் சேலையை அயன் செய்யத் தேவையில்லை. நேரம் மிச்சம். இக்கருவியின் விலை. ரூ.20,000 – ரூ. 1,00,000 வரை கொடுக்கப்படுகிறது. இவர் இது வரை 50 இயந்திரங்களை தேனி, விருதுநகர், திருநெல்வேலி, திருச்சி, சென்னை மற்றும் கேரளா மாநிலங்களுக்கும் விற்பனை செய்துள்ளார்.

எஸ். ஜாபர் அலி
கதவு எண்: 29, சுங்கம் தெரு
பெரிய பள்ளிவாசல் அருகில், கம்பம்– 625516
தேனி மாவட்டம், செல் – 9940916565

## செல்லம்மாளின் கால்நடை வைத்யம்



மதுரை மாவட்டம், டி. வாடிப்பட்டி தாலுகா பாலமேடு டவுனில் திருமதி. செல்லம்மாள் (50) வசித்து வருகிறார். இவர் 5 ம் வகுப்பு வரை படித்துள்ளார். இவருக்கு 3 குழந்தைகள் உள்ளனர். இவர் 1 ஜோடி வண்டி மாடு பராமரித்து வருகிறார். இவர் 2 ஏக்கர் நிலம் குத்தகைக்கு வாங்கி இதில் நிலக்கடலை பயிர் செய்து மகசூல் பெற்று வருகிறார். இவர் ஒரு ஜோடி காளை மாடு பராமரிப்பிற்காக 1 நாளைக்கு ரூ.300–400 வரை செலவு செய்கிறார். இவர் மூலிகை வைத்திய முறையை இவரது தந்தையிடமிருந்து கற்றுக் கொண்டுள்ளார். இவரது கால்நடை மூலிகை வைத்திய அனுபவ முறைகள் பின்வருமாறு:

**மாடு காய்ச்சலுக்கு**

குண்டு முத்து இலை 2 கைப்பிடி எடுத்து அரைத்து இதில் தேன் சேர்த்து உருண்டை செய்து கொடுக்கவேண்டும்.

**மாடு தேறாமலிருந்தால்**

வீலித் தழை – 2 கைபிடி, தேங்காய் – 1 , சீரகம் – 10 கிராம், வெங்காயம் – 50 கிராம், மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து அரைத்து சாறு எடுத்து மாட்டிற்கு 200 மி.லி 3 வேளை வீதம் 1 வாரத்திற்கு கொடுக்கலாம்.

**தண்ணீர் குடிக்காமைக்கு**

தேங்காய் – 1 , மிளகாய் வத்தல்– 50 கிராம், உப்பு – 1 கைபிடி அளவு . மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து அரைத்து சாறு எடுத்து மாட்டிற்கு 200 மி.லி வீதம் கொடுக்கலாம்.

**மாட்டிற்கு மூலிகை உருண்டை தயார் செய்தல்**

பிரண்டை – 1/2 கிலோ, கொய்யா கொழுந்து இலை – 1 கைபிடி, நாவல் இலை – 1 கைபிடி, மஞ்சனத்தி (நுனா) இலை – 1 கைபிடி, மிளகாய் வத்தல் – 50 கிராம், உப்பு – 1 கைபிடி அளவு . மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து அரைத்து உருண்டை செய்து மாட்டிற்கு வாரத்திற்கு 1 முறை கொடுக்கலாம்.

**மாட்டின் பாலின் அளவைக் கூட்ட**

தட்டைப்பயிறு தழையை நித்தம் மாட்டிற்கு 1 கிலோ வீதம் கொடுக்கலாம். கம்பு மாவு கஞ்சியை காய்ச்சி மாட்டிற்கு கொடுக்கவேண்டும்.


பா. செல்லம்மாள்
க/பெ. பாலகிருஷ்ணன்
வடக்குத்தெரு,
செல்லாத்தம்மன் கோயில் தெரு
பாலமேடு – 615005 , டி. வாடிப்பட்டி (தாலுகா)
மதுரை மாவட்டம்
செல்– 9659227516


## கலைவாணியின் இயற்கை பயிர் பாதுகாப்பு



ஈரோடு மாவட்டத்தில் உள்ள பட்லூர் கிராமம், வெள்ளிதிருப்பூரில் வசித்து வருகிறேன். சில பிரச்சினைகளுக்கு பிறகு 5 ஏக்கர் பூமியில் நான் வசித்து வந்தேன். இது வரை வெளி உலகம் தெரியாத எனக்கு மிகப் பெரிய சோதனையாக இருந்தது விவசாயம். விவசாயம் என்ன என்று எனக்கு தெரியாது. இருந்தும் தமிழ் நாடு பல்கலைகழகத்தில் 11/2 ஆண்டு படித்தேன். விவசாயம் செய்ய என்னிடம் பணம் இல்லை. எனவே எனக்கு ஒரு தொண்டு நிறுவனம் மூலமாக மைராடா வேளாண் அறிவியல் நிலையம் கோபிசெட்டிபாளையத்தில் பயிற்சிக்காக அங்கு சேர்ந்தேன். நானும் முழு முயற்சியுடன் கலந்து கொண்டு பயிற்சி எடுத்தேன்.

விவசாயம் என்றால் என்ன? மண்வளம், மகசூல்,

அறுவடை பின்செய் நேர்த்தி எல்லாம் கற்றுத்தந்தனர் எல்லாவற்றையும் அனுபவபூர்வமாக கற்றுக் கொண்டேன். வேலைக்கு ஆள் வைத்துக் கொள்ள வசதி இல்லாத நான் முதலில் எனது தோட்டத்தில் உள்ள வேண்டாத செடி, கொடி, குப்பைகளை வைத்து மிக அருமையான உரம் தயாரித்தேன். மேலும் பஞ்சகவ்யம், பூச்சி விரட்டிகளை தயாரித்தேன். நன்றாக வளர்ந்தது பூச்சி தாக்குதல் ஏற்பட்ட போது பூச்சி விரட்டியை பயன்படுத்தினேன். அது மட்டுமில்லாமல் பயிர்களில் ஊடு பயிர்கள் மூலம் பூச்சிகளை கட்டுப்படுத்த அவைகளை பயிர் செய்தேன் . மேலும் ஆமணக்கு பொறி, விளக்கு பொறி முதலியன பயன்படுத்தப்பட்டது. பயிர்களில் ஊடுபயிர் செய்தால் பூச்சிகளை கட்டுப்படுத்தலாம். இதனால் விவசாயிக்கு உபரி வருமானமும் கிடைக்கிறது. 10 ஏக்கர் தோட்டம் உள்ளவர்களுக்கு ஒரு மாடு இருந்தால் போதும். மிக சிறப்பாக பயனடையலாம். மாட்டிலிருந்து கிடைக்கக்கூடிய கோமியம், சாணம் பயன்படுத்தி மனிதருக்கு கூட பஞ்சகவ்யம் தயார் செய்யலாம். மேலும் விபூதி, முழங்கால் வலிக்கு மருந்து, சோப்பு முதலியவைகளை தயார் செய்யலாம். இவ்வாறு இருக்க மீன்கரைசல், அரப்பு இலைச்சாறு, தேங்காய் மோர்கரைசல், இஞ்சி பூண்டு கரைசல், அக்னிஅஸ்திரம், பிரம்ம அஸ்திரம் முதலியன பயன்பாட்டில் உள்ளது. இதனால் எனக்கு நல்ல மகசூல் கிடைத்தது. ஆகவே நான் மற்ற விவசாயிகளுக்கும் சொல்லலாம் என தோன்றியது.

எனவே எனக்கு பக்கத்தில் உள்ள விவசாயிகளுக்கு தெரிவித்தேன். அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த அம்மாவுக்கு பைத்தியம் பிடித்து விட்டது என கேலி செய்தனர். மனம் தளராமல் முயற்சி செய்தேன். மேலும் மேலும் முயற்சி செய்தேன். அவர்கள் தோட்டத்திற்கு சென்று நானே பேசி 1 ஏக்கர் உள்ள பூமியில் எனக்கு 5 சென்ட் நிலம் கொடுங்கள் நான் அதில் இயற்கை விவசாயம் செய்கிறேன். அதில் சரியான மகசூல் மற்றும் லாபம் கிடைக்கவில்லை என்றால் அதற்கு உரிய பணத்தை நானே கொடுக்கிறேன் என்று ஊர் பஞ்சாயத்து தலைவர் வீட்டில் நானே கேட்டேன். அவர் அதற்கு ஒப்புக் கொண்டு 5 சென்ட் நிலம் தோட்டத்தில் விட்டார். அதில் காய்கறி, கீரை, சிறுதானியங்கள், வாழை, பருத்தி முதலியவைகளை பயிர் செய்தேன். 1/2 ஏக்கரில் அவர்களுக்கு கிடைத்த வருமானத்தை விட 2 பங்கு வருமானம் அதிகமாக 5 சென்டில் கிடைத்தது. இது அவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது.

இதற்கு மேல் எனது தோட்டத்தை ஒவ்வொரு விவசாயியாக வந்து பார்க்க ஆரம்பித்தனர். இது தான் சமயம் என்று 20 விவசாயிகள் கொண்ட குழுவை ஆரம்பித்தேன். இதற்கு மைராடா கே.வி.கே உதவி செய்தது. மற்றும் அரச்சலூர் செல்வம் முன்னோடி விவசாயி எனக்கு உதவி செய்தார். 5 ஏக்கரில் ஆரம்பித்த நான் தற்போது 2000 ஏக்கருக்கு எனது ஊரில் இயற்கை விவசாயம் செய்து வருகிறேன். தற்போது இயற்கை விவசாய பயிற்சியாளராக உள்ளேன். ஈரோடு இயற்கை விவசாய கூட்டமைப்பு தலைவியாகவும் உள்ளேன். கர்நாடகம், கேரளா, ஆந்திரா,தமிழ்நாடு போன்ற மாநிலங்களுக்கும் பயிற்சி எடுக்க போகிறேன். இன்று வரை வெளி மாநிலத்தவரும் தொலைபேசி மூலமாக என்னிடம் ஆலோசனை கேட்டு இயற்கை விவசாயம் செய்கின்றனர். நான் பயிற்சி கொடுக்கும் விவசாயிகளுக்கு அவர்கள் விளை பயிர்களை மதிப்பு கூட்டுப்பொருளாக மாற்ற பயிற்சி கொடுக்கிறேன். இதனால் அவர்களுக்கு அதிக லாபம் கிடைக்கிறது. இதனால் மிக்க மகிழ்ச்சியாக உள்ளனர். பொதுவாக பருத்தி முதலான பணபயிர்களை சாகுபடி செய்யும் முன்னர் பசுந்தாள் பயிர் விதைத்து 45 நாட்கள் விட்டு காடு உழவு ஓட்டி பார் பிடித்து 2 அடிக்கு ஒரு விதையாக விதைக்கப்படுகிறது. கூடவே ஊடுபயிராக ஆமணக்கு விதை (வேலியில்) 10 அடிக்கு ஒன்றாக விதைக்கப்படுகிறது. மேலும் 2 பருத்தி செடிக்கு நடுவில் ஒரு தட்டைப்பயிர் அல்லது ஒரு பச்சைபயிர் அல்லது உளுந்து பயிர் செய்யப்படுகிறது. உயிர்மூடாக்கு போட நரிப்பயிர் பயன்படுத்தப்படுகிறது. மேலும் ஓரங்களில் காய்கறி செடி, செண்டுமல்லி பயன்படுத்தலாம். விதைத்த 20 நாளில் ஒரு முறை பஞ்சகவ்யம் பயன்படுத்தப்படுகிறது. மேலும் 20 நாள் கழித்து பூச்சி விரட்டி பயன்பாட்டில் உள்ளது. அடுத்த 20 நாளில் அரப்பு இலைச்சாறு அல்லது தேமோர் கரைசல் தெளிப்பானாக பயன்படுத்தப்படுகிறது. இதனால் பூக்கள் உதிர்வது இல்லை, பிடிக்கும் பூக்கள் எல்லாம் காயாக மாறுகிறது. காய் பிடித்த பிறகு அக்னி அஸ்திரம் தெளிப்பானாக பயன்படுத்தப்படுகிறது. இதனால் காய்புழு வருவது இல்லை அப்படியே வந்தாலும் 10 லிட்டர் தண்ணீரில் 50 கிராம் மிளகாய்த்தூள், 50 கிராம் உமி சாம்பல், 15 கிராம் காதர் சோப்பு கலந்து தெளித்தால் காய்புழு வருவதில்லை. காய்கள் பெரியதாகவும், பஞ்சு வெண்மையாக நல்ல மகசூல் கிடைக்கிறது. இதனால் செடி நன்றாக வளர்ந்து நோயில்லாமல் மகசூல் அதிகமாக கிடைக்கிறது. மகசூல் முடிந்த பிறகு அந்த

செடிகளை மருதாம்பு செடிகளாக கூட விடலாம் அல்லது அவைகளை மக்க விடுவதால் மண்ணிற்கு நல்ல உரமாகும்.

இயற்கை விவசாயம் என்பது கடல் போல் மிகப்பெரியது. விவசாயி மனது வைத்தால் மட்டுமே இது நல்ல பலனைத்தரும். மகளிர் குழுவிற்கு பயிற்சி கொடுத்து மாடி தோட்டம் அமைக்கவும். மாடி வீடு அல்லாதவர்க்கு வீட்டு அருகில் எப்படி செடிகளை வைத்து பராமரிக்கலாம் என பயிற்சி கொடுக்கிறேன். எனது விவசாய நிகழ்ச்சிகள் ஜெயா டிவி. பொதிகை டிவி. மக்கள்டிவி. ஆந்திரா மெகா டிவி. முதலியவைகளில் வெளியாகியுள்ளன. மாலைமலர், தினகரன், மல்லிகை மலர், பசுமை விகடன் முதலிய பத்திரிகைகளில் வெளியாகியுள்ளன.

பருத்திக்கு இரசாயனத்தில் ஏக்கருக்கு 6 அல்லது 7 குவிண்டால் பஞ்சு எடுப்பதே அதிகம். ஆனால் இயற்கை விவசாயத்தில் நான் 15 குவிண்டால் பஞ்சு எடுத்துள்ளேன். எனது விவசாயிகள் 12 முதல் 15 1/2 குவிண்டால் பஞ்சு எடுத்துள்ளனர். இரசாயனத்தில் செலவுகள் அதிகம்.

இயற்கையில் நமது உழைப்பு மட்டுமே அதிகம். மகசூல் அதிகம். வருமானம் 2 மடங்கு அதிகம் கிடைக்கிறது. நாம் ஏன் இரசாயனத்தை தேடி போக வேண்டும் ?

ஏ. கலைவாணி
பெருமாள் கோவில் தோட்டம் ,பொம்மன்பட்டி,
வெள்ளித்திருப்பூர் அஞ்சல்
அந்தியூர் தாலுகா, ஈரோடு மாவட்டம்
செல் :9865485221

**திருமதி. கலைவாணிக்கு சிறந்த வேளாண்மை சேவைக்காக மதுரை தானம் அறக்கட்டளை ரூ.25,000 பரிசு தொகையும் கேடயமும் மதுரையில் நடைபெற்ற தானம் அறக்கட்டளையில் நிறுவன நாளான 2.10.2015 அன்று கொடுத்து கௌரவித்தது. – ஆசிரியர்**

## ரவிச்சந்திரனின் பஞ்சகவ்யா தயாரிப்பு

தர்மபுரி மாவட்டம், அரூர் தாலுகாவில் கோட்ரப்பட்டி கிராமத்தில் திரு. ரவிச்சந்திரன் வசித்து வருகிறார். இவர் பட்ட படிப்பு படித்து விட்டு விவசாயத்தில் ஈடுபாடு அதிகம் உள்ளதால் இயற்கை பண்ணையை உருவாக்கி, நிர்வாகம் செய்து வருகிறார். இந்த பண்ணையில் 170 ஏக்கரில் மாந்தோப்பும், 3 ஏக்கரில் மஞ்சளும், 3 ஏக்கரில் நெல்லும் உள்ளன. இவர் கடந்த 15 ஆண்டுகளாக இந்த இயற்கை பண்ணையை நடத்தி வருகின்றார்.

இவர் தயார் செய்யும் பஞ்சகவ்யம், ஜீவாமிர்தம், மண்புழு உரங்கள் அனைத்தும் இவருடைய நிலத்திற்கு மட்டும் பயன்படுத்துகிறார். வெளியில் யாருக்கும் விற்பனை செய்வதில்லை.

**பஞ்சகவ்யம்**

சாணம் – 100 கிலோ, நெய்– 2 கிலோ, இளநீர் – 100(காய்கள்), தயிர் – 50 லிட்டர், பால் –50 லிட்டர், வாழைப்பழம் –100 (பழங்கள்). முதன் முதலில் சாணத்தை நெய்யுடன் நன்றாக சேர்த்து மிதித்துக் கொள்ள வேண்டும். பிறகு இளநீர், தயிர், பால், வாழைப்பழம் இவற்றை நன்றாக சேர்த்து மிதித்து ஒன்று சேர்த்து ஒரு கலவையாக்கிக் கொள்ள வேண்டும். பிறகு இவற்றை தினமும் காலையிலும், மாலையிலும் கிளறி விட வேண்டும். பதினைந்து நாட்கள் கழித்து இவற்றை தெளிக்க வேண்டும். இவர் மாந்தோப்பு, தென்னந்தோப்பு, வாழைத்தோப்பு வைத்துள்ளார். இந்த தோட்டங்களுக்கு இந்த பஞ்சகவ்யத்தை தெளிக்கிறார். மாவில் பூ எடுக்க பூப்பதற்கு 3 மாதங்களுக்கு முன்னர் 1500 லிட்டர் கொள்ளளவு கொண்ட டேங்கில் ஊற்றி டிக்டராக்டர் மூலம் கலவையை தெளிக்கிறார்.

**ஜீவாமிர்தம்**

தண்ணீர் – 200 லிட்டர், சாணம்–10 கிலோ , கோமியம்– 5 லிட்டர், பருப்பு மாவு – 2 கிலோ, வெல்லம் – 2 கிலோ. இவை அனைத்தும் நன்றாக கலந்து ஊற வைக்க வேண்டும். நாள் ஒன்றுக்கு மூன்று தடவை கிளறி விட வேண்டும். 2–5 நாட்கள் கழித்து மரங்களுக்கு தெளிக்க வேண்டும்.

இவர் உற்பத்தியாகும் மாம்பழங்களைக் கொண்டு இயற்கையான முறையில் ஜூஸ் தயார் செய்கிறார். இதற்கான தொழிற்சாலை ஒசூரில் உள்ளது. இவர் உற்பத்தி செய்யும் மாம்பழ ஜுஸ்ஸின் பெயர் ''ஆர்கனா''.இந்த ஜுஸில் எவ்வித வேதிப்பொருட்களும் சேர்ப்பதில்லை. ஆர்கனா ஜுஸ்ஸை சிங்கப்பூர், ஹைதராபாத் போன்ற இடங்களுக்கு ஏற்றுமதி செய்கிறார்.

திரு. ரவிச்சந்திரன்
காட்டூர் கிராமம்
செட்ரப்பட்டி அஞ்சல்
அரூர் தாலுகா
தர்மபுரிமாவட்டம் –635 305
செல் – 9655558129

## கோட்ரப்பட்டி ஆறுமுகத்தின் கால்நடை வைத்யம்

தர்மபுரி மாவட்டம்,அரூர் தாலுகா, கோட்ரப்பட்டி கிராமத்தில் திரு. ஆறுமுகம் வசித்து வருகிறார். இவர் ஒரு விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவர். இவர் சுயமாகவே பத்து ஆண்டுகளாக மாடுகளுக்கு வைத்தியம் பார்க்கிறார். இவர் ஊருக்கு மட்டுமில்லாமல், பல ஊர்களுக்கு சென்றும் மாடுகளுக்கு வைத்தியம் பார்க்கின்றார். இவரது முதன்மையான தொழிலே மாட்டு வைத்தியமாகும்.

**அஜிரணக்கோளாறுக்கு**

சோயாமாவு – 150 கிராம், இஞ்சி– 50 கிராம், வெல்லம் – 200 கிராம் எடுத்து ஒன்றாக சேர்த்து அரைத்து உருண்டை பிடிக்க வேண்டும். இந்த உருண்டையை தினமும் தொடர்ந்து மூன்று நாட்களுக்கு காலையில் வெறு வயிற்றில் கொடுக்க வேண்டும். இப்படி கொடுத்தால் 3 நாட்களில் அஜிரணக் கோளாறு குணமடைகிறது.

**கால்சியம் குறைபாட்டிற்கு**

கல் சுண்ணாம்பு எடுத்து ஒரு மண் பானையில் நீர் ஊற்றி நன்றாக கொதிக்க வைக்க வேண்டும். பிறகு தெளிந்த நீரை மாட்டுக்கு ஊற்றி வந்தால் கால்சியம் குறைபாடு நீங்கும். இந்த சுண்ணாம்பு நீரானது அதிக பால் உற்பத்திக்கும் காரணமாகிறது.

**மடிநோய் வீக்கத்திற்கு**

எலுமிச்சை சாறு (1 பழம்),சாக்பீஸ்– 2, சோற்றுக்கற்றாழை – தேவையான அளவு, மஞ்சள்தூள் – 50 கிராம். இவை அனைத்தும் நன்றாக கலந்து அரைக்க வேண்டும். பின்னர் இவற்றை மடியின் மீது தடவினால் மடி நோய் மற்றும் மடி வீக்கம் குணமாகும். 2 நாட்களுக்கு இரு வேளைகளும் தடவ வேண்டும்.

**சினைபிடிக்க** (கர்ப்பபை வளர்ச்சிக்கு)

மூக்குகடலை – 200 கிராம் தினமும் தொடர்ந்து 20 நாட்களுக்கு மாட்டுக்கு கொடுத்தால் கர்ப்பபை வளர்ச்சியடைந்து சினை பருவத்திற்கு வரும். இந்த மூக்குகடலையை நன்றாக இரவு முழுவதும் ஊற வைத்து முளை கட்டிய பின் மாட்டுக்குக் கொடுக்க வேண்டும். பின்னர் இனப்பெருக்கம் செய்தால் சினைக்கு வரும்.

**காய்ச்சலுக்கு**

இரண்டு முள்ளங்கி காய்களை நறுக்கி மாட்டிற்கு புகட்ட வேண்டும்.

**புண்ணில் புழு வைத்தால்**

கற்பூரத்தை பொடி செய்து மண்ணெண்ணெயில் குளப்பி புழு வைத்த புண்ணில் தடவ வேண்டும் .

**கோமாரிக்கு**

இந்த நோயானது ஒரு மாட்டிலிருந்து மற்றொரு மாட்டிற்கு பரவக் கூடியது. இது ஒரு கொடிய நோய். இந்நோயினால் கால் குளம்பில் புண் ஏற்பட்டால் அவ்விடத்தில் சிறிது பெட்ரோல் சொட்டு விடவேண்டும். முட்டையை உடைத்து தேங்காய் எண்ணெயில் கலந்து புகட்ட வேண்டும்.

**நஞ்சுக்கொடி விழ**

தாய் மாடானது கன்று ஈன்ற 8 மணி நேரத்திற்குள் செத்தை போட வேண்டும். அப்படி போடா விட்டால் வெல்லம் மற்றும் எள்ளு இவற்றை சேர்த்து அரைத்து உருண்டை 250 கிராம் பிடித்து வாயில் இட வேண்டும். இல்லையென்றால் வெண்டைக்காய் 2–3 கிலோ மாட்டிற்க்கு தின்ன கொடுக்க வேண்டும்.

**சொக்கினால்**

எருக்கம் செடியின் பால் அல்லது கரும்பினை மாட்டின் வாயில் வைக்க அது அசை போட்டால் சொக்கல் விடும்.

எம். ஆறுமுகம்
த/பெ. மாணிக்கம்
கோட்ரப்பட்டி கிராமம்
சத்தப்பட்டி அஞ்சல்
அரூர் தாலுகா
தர்மபுரி மாவட்டம்
செல் – 9442874652
தொகுப்பு : எஸ். இளவரசி, இந்துகவி
வேளாண்மை கல்லூரி மாணவிகள், கலவை, வேலூர்

## பசு மாட்டு கோமியத்தின் மகிமை

நமது வேதங்களிலும், பழமை வாய்ந்த மருத்துவ நூல்களிலும், நமது நாட்டு பசுக்களின் கோமியம் மருந்து என்று குறிப்பிடப்படுகின்றது. நாட்டு பசுக்களின் கோமியம் மனித உடலிற்கு தேவையற்ற பாக்டீரியாக்களை அழிக்க வல்ல சக்தி வாய்ந்தது. பழமைமிக்க ஆயுர் வேதத்தின் கூற்றின்படி நமது உடல், வாத, பித்த, கபம் குணங்கள் ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் உள்ளது. இவைகளின் மாறுபட்ட தன்மையிலேயே நமது உடலில் நோய்கள் உருவாகின்றன. இந்த வாத, பித்த, கப சரி விகிதத்தை சரி செய்யக் கூடிய அரு மருந்தாக நாட்டு பசுக்களின் கோமியம் உள்ளது . நாட்டு பசுக்களின் கோமியம் நமது நுரையீரலை நன்றாக இயக்கச் செய்து அதன் மூலம் இரத்த ஓட்டத்தை சீர்படுத்தி நோய்களை மனித உடலுக்கு ஏற்படா வண்ணம் தடுக்கிறது. இந்திய நாட்டு பசுக்களின்

கோமியத்தில் மனித உடலுக்கு அடிப்படைத் தேவையான இருபத்திநான்கு கனிமங்கள் உள்ளன. கோமியத்தை நாம் எடுத்துக் கொள்வதன் மூலம் மனித உடலின் குறைபாடுள்ள அடிப்படை கனிமங்கள் நிறைவு செய்யப்படுகின்றது. குறிப்பாக கோமியத்திலுள்ள தாமிரம், தங்கம் போன்ற கனிமங்கள் தமது உடலுக்கு சக்தியையும் நோய் எதிர்ப்பு சக்தியையும் அளிக்கின்றது. மேலும் நமது உடலிலுள்ள நச்சுக் கழிவுகளையும் அகற்ற உதவுகிறது. தொடர் மன உளச்சலினால் மிக மோசமாக நமது நரம்பு மண்டலம் பாதிக்கப்படுகிறது, தொடர்ந்து நாட்டு பசுவின் கோமியம் பயன்படுத்துவதன் மூலம் நம் இதயத்தையும், நரம்பு மண்டலத்தையும் உறுதிப்படுத்தி மனித உடலை, மாரடைப்பு , நரம்பு செயலிழத்தல் ஆகிய வற்றிலிருந்து நம்மை முழுமையாக காப்பாற்றுகிறது என ஆயுர் வேத மருத்துவர்கள் கூறியுள்ளனர். கோமூத்திர வைத்திய முறை இந்திய ஆயுர் வேத மருத்துவத்தின் தாய் என அழைக்கப்படுகிறது.

சுஸ்ருத் சனிதா (sushrut sanhita) என்ற முறை வலிகள், குடல் கோளாறு, வாய் துர் நாற்றம் போன்ற வாய் சம்மந்தமான நோய்களை நிச்சயம் சரி செய்யக் கூடிய முறை என குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இம்முறை தொழுநோய், அனைத்து வித சிறுநீரக கோளாறு தீர்க்க வல்லது. கண்வலி, வாயுத்தொல்லை, இருமல், சளி, இளப்பு, மஞ்சகாமாலை, பித்தபை கோளாறு, பலவீனம், காது வலி, மற்றும் சுவாச கோளாறுகளை சரி செய்கிறது. இந்த அனைத்து விதமான நோய்களையும் நாட்டு பசுவின் கோமியத்தின் மூலம் சரி செய்ய முடியும் என்பது ஆராய்ச்சியில் நிருபிக்கப்பட்டுள்ளது. நம் நாட்டு பசுவின் கோமியம் மனித குலத்தின் நன்மைக்காக நமக்கு அளிக்கப்பட்ட ஓர் அருமருந்து. நம் அறிவை கூர்மைபடுத்தும் மேலும் வயிறுவலி, வாயுத் தொல்லை, சரி செய்யும். கோமியம் தேவையற்ற கழிவுகளை நீக்கி செரிமானத்தை முறைப்படுத்தும். ஜீரனம், வாய், தோல் நோய்கள், மாதவிடாய் கோளாறு, ஆஸ்துமா, சளி, சிறுநீரககோளாறு போன்ற நோய்களுக்கு தொடர்ந்து கோமியத்தை பயன்படுத்துவதன் மூலம் எந்த வித பக்க விளைவுகளுமின்றி குணப்படுத்தலாம். பல மத சடங்குகளில் கெட்டவற்றை நீக்கி நல்லவற்றை அளிக்கும் சுத்தப்படுத்தும் பொருளாக வேதங்களில் கோமியம் பயன்படுத்தப்படுகிறது. நாட்டு பசுவின் கோமியம், சாணம் மூலம் கதிரியக்க சிகிச்சையாக முறையாக எந்த வித பக்க விளைவுகளுமின்றி புற்று நோய்க்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. நாட்டு பசுக்களின் கோமியத்தை நாம் முறையாகவும். கவனத்துடனும் உபயோகப்படுத்தினால் மூப்பு குறையும். நாம் பீங்கான் அல்லது மட்பாண்டங்களில் சேகரித்து பயன்படுத்தினால் அது எப்போதும் கெடாது.

Z.S.Rana, CCS Haryana Agricultural University, Hisar - 125 004-Utility of Gaushalas for Improvement and Conservation of Indigenous cattle – 2005.

தொகுப்பு : இராஜேந்திரன், சேவா

## கவசமாக செயல்படும் அங்கி




சிவகங்கை மாவட்டம், தஞ்சாக்கூர் கிராமத்தில் இந்தியபாரதிதாசன் (40) 7 வது வரை படித்து விட்டு விவசாயம் செய்து வருகிறார். இவர் தன்னுடைய நேரத்தை புதிய கண்டுபிடிப்புகள் உருவாக்குவதில் அர்ப்பணிக்கிறார். இவர் ஏற்கனவே களையெடுக்கும் இயந்திரம், காற்றில்லாமல் தேசியகொடி பறக்கும் உத்தி, கன்மாயில் இரட்டை வாய்க்கால் நீர்பாசன முறை போன்றவற்றை உருவாக்கியுள்ளார். தற்சமயம் கவசமாக செயல்படும் அங்கி ஒன்றை உருவாக்கியுள்ளார். குறிப்பாக கலவரப்பகுதியில் பணியாற்றும் காவலர்களுக்குப் பயன்படும். மற்றும் கட்டட வேலை செய்பவர்கள், போன்ற ஆபத்தான, உயரமானத் இடங்களில் வேலை செய்பவர்கள் கீழே விழ நேர்ந்தாலும் பாதுகாப்பு அளிக்கும். இரண்டு சக்கர வாகனங்களில் செல்பவர்கள், நீச்சல் தெரியாதவர்கள் படகில் செல்லும் போதும் இந்த அங்கியை அணிந்தால் விபத்திலிருந்து காயமில்லாமல் தப்பித்து விடலாம்.

இந்த அங்கியில் 4 பலூன்கள் உள்வாக்கில் பொறுத்தப்பட்டுள்ளன. இதனை வாயினுள் ஊதி காற்றை நிரப்பிக் கொள்ள வேண்டும். புஜப்பகுதியில் இரப்பர் வைக்கப்பட்டுள்ளது. முழுவதும் காட்டன் துணியில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் கயிறு வைத்து டைட் செய்து கொள்ள வசதி உண்டு. இந்த சட்டையை செய்து முடிக்க ரூ. 2,500 வரை செலவாகும்.

இந்தியபாரதிதாசன்
தஞ்சாக்கூர் அஞ்சல்
மானாமதுரை வட்டம்
சிவகங்கை மாவட்டம், செல் : 9047290676

## பெருமாள்பட்டி கால்நடை பராமரிப்போரின் மூலிகைவைத்திய அனுபவங்கள்

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி தாலுகா டி.பெருமாள் பட்டியில் கடந்த 14.6.2015 அன்று கால்நடை மூலிகை வைத்ய முகாம் நபார்டு வங்கி மூலம் நடைபெற்றது. இந்த வைத்திய முகாமில் 40க்கு மேலோன கறவை மாடுகள் பராமரிப்பவர்கள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர். கறவை மாடுகளுக்கு என்னென்ன நோய்கள் வருகிறது. அதனை மூலிகை கொண்டு எவ்வாறு குணப்படுத்தலாம் என்று வே.அழகுமலை, சேவா விளக்கமளித்தார். பின்னர் கால்நடைகளுக்கு மூலிகை குடற்புழு மருந்து தயாரிக்கப்பட்டு ஆடு மாடுகளுக்கு கொடுக்கப்பட்டது. இந்த வைத்திய முகாமில் கால்நடை பராமரிப்பவர்களிருந்து சில மூலிகை வைத்திய அனுபவகள் தொகுக்கப்பட்டது. அவை பின்வருமாறு.

**கழிச்சலுக்கு**

முருங்கப்பட்டை – 200 கிராம், பெருந்தும்பை இலை – 2 கைப்பிடி, குப்பைமேனி இலை – 2 கைப்பிடி, கொழிஞ்சி வேர்– 200 கிராம், உப்பு – 1 கைப்பிடி மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து நீர் விட்டு அரைத்து மாட்டிற்கு 300 மி.லி வீதம் 2 வேளை கொடுக்கவேண்டும்.

**மடிநோய்க்கு**

பேய் பீர்க்கு இலை – 250 கிராம், டால்டா– 100 கிராம், எலுமிச்சம் பழம் – 5 எண்ணம், மஞ்சள் பொடி – 50 கிராம், உப்பு, தண்ணீர் – தேவையான அளவு , உருளை கிழங்கு – 5 எண்ணம். மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து அரைத்து பசை போல் செய்து மாட்டின் மடி, காம்பு முழுவதும் பூசி விடவும். பின்னர் பச்சை உருளைக் கிழங்கை அறுத்து உள்ளே கொடுக்கவும். இப்படி 3 நாளைக்கு 2 வேளை வீதம் செய்ய வேண்டும்.

அன்னகாமு
க/பெ. ராமையா
டி. பெருமாள்பட்டி

**ஆடு கழிச்சலுக்கு**

பூவரசு இலை – 2 கைப்பிடி, வெந்தயம் – 50 கிராம், சீரகம்– 50 கிராம் அனைத்தும் அரைத்து இத்துடன் மோர் – 100 மி.லி சேர்த்து அரைத்து ஆட்டிற்கு 100 மி.லி வீதம் 3 வேளை கொடுத்தால் சரியாகும்.

**விஷக்கடிக்கு**

வெள்ளைப்பூண்டு– 50 கிராம், மிளகு – 50 கிராம், சீரகம்– 30 கிராம், வெங்காயம்– 50 கிராம், வெத்தலை – 5 எண்ணம் குப்பைமேனி இலை – 2 கைப்பிடி . மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து அரைத்து சாறு எடுத்து வெள்ளைத் துணியில் கட்டி மாட்டின் இரு கண்ணிலும் 3 சொட்டு வீதம் 2 வேளை விடவேண்டும் .

**மாட்டு சாணம் இரத்தமாக போனால்** (இரத்தக் கழிச்சல்) விளாம்பிசின் – 2 கைப்பிடி, வெள்ளைபூண்டு – 100 கிராம், தயிர் – 200 கிராம். விளாம்பிசின் மற்றும் வெள்ளை பூண்டுடன் தயிர் சேர்த்து அரைத்து மாட்டிற்கு 2 வேளை கொடுக்கவேண்டும்.

**காய்ச்சலுக்கு**

துளசி இலை – 2 கைப்பிடி, வில்வஇலை – 2 கைப்பிடி, வேப்ப இலை – 2 கைப்பிடி, கடுக்காய்– 100 கிராம், மிளகு – 50 கிராம். மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து அரைத்து வெண்ணீரில் கலந்து 300 மி.லி வீதம் 3 வேளை கொடுக்கவேண்டும்.

**மாடு இளைத்தால்**

இஞ்சி – 150 கிராம், வெள்ள எருக்கம் பூ – 20 எண்ணம், மிளகு– 200 கிராம். மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து 1 லிட்டர் தண்ணீரில் சேர்த்து கொதிக்க வைத்து 1 லிட்டர் தண்ணீர் 1/2 லிட்டராக வரும் வரை காய்ச்சவும். இதனை மாட்டிற்கு 200 மி.லி வீதம் 2 வேளை கொடுக்கவேண்டும்.

**மாட்டிற்கு ரோமம் கொட்டினால்**

கடுக்காய் பவுடர் – 100 கிராம், தான்றிக்காய் – 100 கிராம், நெல்லிக்காய் – 100 கிராம், எலுமிச்சை சாறு – 100 மி.லி. மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து மாட்டின் மீது 2 வேளை வீதம் 3 நாட்களுக்கு தடவவேண்டும்.

பொன்னழகு
க/பெ. குபேந்திரன்
டி.பெருமாள்பட்டி

## சடையனின் கால்நடை மூலிகை வைத்யம்

சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன் பாளையம் தாலுகா கிளாக்காடு கிராமத்தில் திரு. சடையன் (38) வசித்து வருகிறார். இவர் 2 ம் வகுப்பு வரை படித்துள்ளார். இவருக்குச் சொந்தமாக 2 ஏக்கர் நிலம் உள்ளது. இதில் மரவள்ளிக் கிழங்கு, காய்கறிகள் பயிரிட்டு மகசூல் பெற்று வருகிறார். இவரது கால்நடை மூலிகை வைத்திய அனுபவ முறைகள் பின்வருமாறு.

**விஷக்கடிக்கு**

தேவையான பொருட்கள்: மந்தபாலா இலை – ஒரு கைப்பிடி, வெள்ளருகு இலை – ஒரு கைப்பிடி, பாப்பட்டை – 50 கிராம், அருகம் புல் – ஒரு கைப்பிடி, ஒத்தாமலைச் செடி இலை – ஒரு கைப்பிடி, குண்டல் செடி இலை – ஒரு கைப்பிடி, மலகாண்டா செடி இலை – ஒரு கைப்பிடி, கொன்னம் பட்டை – 50 கிராம், எருக்கு இலை – ஒரு கைப்பிடி, மிளகு – 20 கிராம், பூண்டு – 20 கிராம், மிளகாய் – 20 கிராம். மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து அரைத்து உருண்டை செய்து மாடுகளுக்கு 50 கிராம் அளவு உருண்டை 2 வேளையும் ஆடுகளுக்கு 25 கிராம் அளவு உருண்டை 2 வேளையும் கொடுக்கலாம்.

**கழிச்சலுக்கு**

தேவையான பொருட்கள்: கடுக்காய் – 100 கிராம், காரமாத்திபட்டை – 100 கிராம், பேயாளபட்டை – 100 கிராம், பேரத்தி பட்டை – 100 கிராம், பூடு மரப்பட்டை– 100 கிராம், கடம்பம் இலை – 100 கிராம். மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து அரைத்து உருண்டை செய்து மாட்டிற்கு இரண்டு உருண்டை வீதம் 2 வேளை கொடுக்க வேண்டும்.

**காய்ச்சல்** (குந்து)

மாட்டாங்கொடி – 100 கிராம், கொத்தாங்கொடி – 100 கிராம் சேர்த்து அரைத்து மாட்டிற்கு 300 மி.லி வீதம் 2 வேளை கொடுக்கலாம்.

அ. சடையன், த/பெ. அண்ணாமலை
தாழ்வீதி, கிளாக்காடு , கருமந்துறை(அஞ்சல்)
பெத்தநாயக்கன் பாளையம் (வட்டம்)
சேலம் (மாவட்டம்) – 636138, செல் – 9159802922

## மாதையனின் கால்நடை வைத்தியம்

சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன் பாளையம் வட்டம் கிளாக்காடு கிராமத்தில் திரு. மாதையன் (53) வசித்து வருகிறார். இவர் பள்ளிக்கூடம் போனதில்லை. இவருக்கு 2 பெண் மற்றும் 1 ஆண் குழந்தைகள் உள்ளனர். இவருக்குச் சொந்தமாக 5 ஏக்கர் நிலம் உள்ளது. இதில் தக்காளி, கரும்பு, மஞ்சள் பயிரிட்டு மகசூல் பெற்று வருகிறார். இவர் கறவை மாடு 4 , ஆடு 6 மற்றும் உழவு மாடு வைத்து பராமரித்து வருகிறார். இவரது கால்நடை மூலிகை வைத்திய அனுபவ முறைகள் பின்வருமாறு.

**ஆடு மாடு கழிச்சலுக்கு**

தேவையான பொருட்கள்: வெள்ளை அரளி இலை பட்டை – 50 கிராம், அத்தி மர பட்டை – 50 கிராம், புரசு மரபட்டை – 50 கிராம், முயல் காது செடி இலை – ஒரு கைப்பிடி, மிளகு – 20 கிராம், பூண்டு – 20 கிராம். மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து அரைத்து சாறு எடுத்து மாட்டின் மூக்கில் 5 சொட்டு 2 வேளை கொடுக்க வேண்டும்.

**தொண்டை அடைப்பானுக்கு**

தேவையான பொருட்கள்: வெள்ளை அரளி பட்டை – 50 கிராம் , நெடு வெளுங்கு மரப்பட்டை – 50 கிராம், அத்தி மரப்பட்டை – 50 கிராம், புரசு மரப்பட்டை – 50 கிராம், முயல் காது இலை – ஒரு கைப்பிடி, மிளகு – 20 கிராம், பூண்டு – 20 கிராம், மிளகாய் – 50 கிராம், ஓமம் – 20 கிராம், கசகசா– 20 கிராம். மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து அரைத்து சாறு எடுத்து மாட்டிற்கு 300 மி.லி வீதம் 2 வேளை கொடுக்க வேண்டும்.

**சப்பை கட்டி நோய்க்கு**

தேவையான பொருட்கள்: வெள்ளை அரளி பட்டை – 50 கிராம், நெரு வெளுங்கு மரப்பட்டை – 50 கிராம், அத்தி மரப்பட்டை – 50 கிராம், புரசு மரப்பட்டை– 50 கிராம், மிளகு – 20 கிராம், பூண்டு – 20 கிராம், மிளகாய் – 20 கிராம். தேங்காய் எண்ணெய் –500 மி.லி. மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து அரைத்து பசை போல் செய்து தேங்காய்எண்ணெயுடன் கலந்து மாட்டின் சப்பை நோய் உள்ள இடத்தில் 2 வேளை வீதம் தடவ வேண்டும்.

**மடிநோய்க்கு**

தேவையான பொருட்கள் : வெள்ளருகு வேர் – 1/2 கிலோ , கோவை இலை – 2 கைப்பிடி, பன்றி நெய் – 100 கிராம். மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து அரைத்து மாட்டின் மடி மீது 2 வேளை வீதம் 3 நாளைக்கு தடவ வேண்டும்.

**கோழி கழிச்சலுக்கு**

தேவையான பொருட்கள்: குப்பை மேனி இலை சாறு – 10 மி.லி , பன்றி நெய் – 1 தேக்கரண்டி, மிளகு – 2 எண்ணம், சீரகம் – 5 எண்ணம். மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து அரைத்து மிளகு அளவு உருட்டி எடுத்து கோழிகளுக்கு 2 உருண்டை வீதம் 3 வேளை கொடுக்கலாம்.

என். மாதையன், த/பெ. லெட்சுமணன், கிளாக்காடு
கருமந்துறை அஞ்சல், சேலம் மாவட்டம்
செல் : 8438473645

## அண்ணாமலையின் கால்நடை வைத்யம்



சேலம் மாவட்டம், ஏற்காடு தாலுகா, மஞ்சக்குட்டை கிராமத்தில் திரு. அண்ணாமலை (50) வசித்து வருகிறார். இவர் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளார். இவருக்குச் சொந்தமாக 2 ஏக்கர் காபி தோட்டம் உள்ளது. இவரது கால்நடை மூலிகை வைத்திய அனுபவங்கள் பின்வருமாறு:

**காய்ச்சலுக்கு**

பூண்டு – 20 கிராம், மிளகு – 20 கிராம், மணத்தக்காளி இலை – ஒரு கைப்பிடி, சீனி மிளகாய் – 10 எண்ணம், தேன் – 100 மி.லி, பனை வெல்லம் – 100 கிராம். மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து அரைத்து மாடுகளுக்கு 300 மி.லியும், ஆடுகளுக்கு 200 மி.லியும் கொடுக்க வேண்டும் .

**மடி நோய்க்கு**

பாறை இடுக்கி கிழங்கு (அல்லது) கொல்லங் கோவைக் கிழங்கு – 500 கிராம், மிளகு – 30 கிராம், தேன் – 100 மி.லி, மஞ்சள் பொடி – 50 கிராம், நல்லெண்ணெய் – 200 மி.லி. மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து அரைத்து மாட்டின் மடி மீது 3 வேளை பூச வேண்டும்.

அ. அண்ணாமலை
த/பெ. அருணாச்சலம்
மஞ்சக்குட்டை கிராமம்
ஏற்காடு தாலுகா, சேலம் மாவட்டம்
செல் – 9489390164

## முகம்மது உசைனனின் மூலிகை வைத்யம்

முகம்மது உசைன் (64) பாரம்பரிய சித்த வைத்யர். இவரது குடும்பத்தில் கடந்த 8 தலை முறைகளாக மூலிகை வைத்யம் கடைபிடிக்கப்படுகிறது. இவர் 9 ம் வகுப்பு வரை படித்து விட்டு பயர் சர்வீஸ் டிரைவராக வேலை பார்த்து வந்தார். வேலையில் ஓய்வு பெற்ற பின்னர் முழு நேர வைத்யராக வைத்யம் செய்து வருகிறார். இவர் முதுகுத்தண்டுவட வைத்யம், மூட்டு வலி, சிறு நீரகக் கற்கள், இருதய மாரடைப்பு, தூக்கமின்மை போன்ற அனைத்து நோய்களுக்கும் வைத்யம் செய்து வருகிறார். இவரோடு சேர்ந்து இவரது மகனும் இணைந்து வைத்யம் செய்து வருகிறார். இவர் கடைபிடிக்கும் வைத்ய முறைகள் பின்வருமாறு:

**முதுகுத்தண்டு நிவாரண சிகிச்சை**

முதுகுத்தண்டுவடத்திற்கு பலம் கொடுத்து இது சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்றன. முதலில் வெளிப்பூச்சாக எண்ணெய் தயார் செய்து தேய்ப்பதற்கு தருகிறார். இலுப்பெண்ணெய் , கடலை எண்ணெய், புங்க எண்ணெய், விளக்கெண்ணெய் சம பங்கு சேர்த்து இதில் இடித்த முருங்கை இலை, புளிய இலை, பிரண்டை, எட்டிக் கொட்டை இவைகளை நீராக ஆகும் வரை சில நாட்கள் ஊற வைக்க வேண்டும். பின்னர் இதனை ஒரே விறகு வைத்து நிதானமாக நீண்ட நேரம் காய்ச்ச வேண்டும். பின்னர் எண்ணெய் பதத்தில் இறக்கி பாட்டிலில் ஊற்றி வைத்துக் கொள்ள வேண்டும். இந்த எண்ணெய்யை உடம்பில் , முதுகுப்பகுதியில் முழுவதும் தேய்த்து விட வேண்டும். உள் மருந்தாக நாடியின் அளவைப் பார்த்து பித்தம், கபம், வாயு இதற்கேற்றாற்போல் மருந்து செய்து கொடுக்கிறார். இந்த மருந்திற்கு பத்தியம் தேவையில்லை.

**இரத்த சோகை அல்லது இரத்த அணுக்கள் கூட**

சிலர் தூக்கமின்மையாலும் நரம்புத்தளச்சியாலும் கஷ்டப்படுகிறார்கள். இவர்களுக்கு உடம்பிற்கு தெம்பினை கொடுத்து இரத்த அணுக்கள் கூட கீழ்கண்ட தயாரிப்பை சில நாட்கள் அருந்தி வர வேண்டும். மூக்குகடலை–32, பாதாம்பருப்பு – 4, அத்திபழம்–4, பேரீச்சம்பழம்–4, உலர்ந்த திராட்சை–20. இவை அனைத்தையும் ஒரு டம்ளர் நீரில் இரவில் ஊறல் போட்டு காலையில் அருந்தலாம். ஊறிய பழங்களை (கசடு) மென்று தின்று விட வேண்டும். இதனை 2 வாரங்கள் அருந்தி வரலாம். கொள்ளு, அரிசி இரண்டையும் வறுத்து பின் காய்ச்சிய கஞ்சியில் கொத்தமல்லி, புதினா, வெங்காயம், கருவேப்பிலை சேர்த்து சாப்பிட உடம்பில் இரும்பு சத்து கூடும்.

**சிறுநீரக கற்களுக்கு**

காலையில் ஒரு முள்ளங்கியை நறுக்கி சாறு எடுத்து சாப்பிட வேண்டும். இரவில் கொள்ளு–50கிராம், 300 மி.லி நீரில் வேக வைத்த கசாயத்தை உப்பில்லாமல் அருந்தி வர வேண்டும். இத்துடன் மூலிகை தூள் (வைத்தியர் தயாரித்து வைத்துள்ளார்) ஒரு சிட்டிகை சேர்த்து சாப்பிட விரைவில் நிவாரணம் கிடைக்கும். பத்தியமாக மொச்சை கொட்டை, பருப்பு உணவு,

எண்ணெயில் வறுக்கப்பட்ட பதார்த்தங்கள், முட்டை, மாமிசம், பால் தவிர்க்க வேண்டும். உடல் உறவு கூடாது.

ஜி. முகமது உசைன்வைத்யர்
எண்– 9/5, இளங்கோ தெரு
ஜோதி நகர்
அரக்கோணம் – 631 003 (அன்னை சில்க்ஸ் அருகில்)
வேலூர் மாவட்டம்
செல் – 9442745731 / 9944281767

## மலை ஓடைத் தழை –ஆட்டுத் தீவனம்



திண்டுக்கல் மாவட்டம் பள்ளப்பட்டி கிராமத்தில் திரு. துரைச்சாமி (60) வசித்து வருகிறார். இவர் 2ம் வகுப்பு வரை படித்துள்ளார். இவருக்கு 3 குழந்தைகள் உள்ளனர். இவருக்கு சொந்தமாக 60 வெள்ளாடுகள் உள்ளன. இதில் 10 கிடாக்களும் அடங்கும். இவர் காலையில் 9 மணிக்கு ஆடுகளை மேய்ச்சலுக்கு ஓட்டி செல்கிறார். பின்னர் மாலை 5 மணிக்கு ஆடுகளை வீட்டிற்கு ஓட்டி வருகிறார். ஆடு மலைகளில் மேயும் போது இந்த மலை ஓடைத் தழையை (Combretum albidum) மிகவும் விரும்பி சாப்பிடுவதைக் கண்ட இவர் வாரத்திற்கு 3 நாட்கள் இந்த மலை ஓடைத் தழையை ஒரு ஆட்டிற்கு 1–2 கிலோ வீதம் 1 வேளைக்கு கொடுத்து வருகிறார். மலை ஓடைத் தழை ஒரு கொடியாக படரும் தாவரம். இது மரங்களின் மேல் படரும் தன்மை கொண்டது.

இந்த தழையை கொடுப்பதால் ஆடுகள் மிகதெளிச்சியாகவும் ஆரோக்கியமாகவும் இருப்பதாகக் கூறுகிறார். இவர் கடந்த 5 வருடங்களாக இந்த மலை ஓடைத் தழையை ஆட்டிற்கு கொடுத்து வருகிறார்.

**அச்சு தழையை** (Grewia hirsuta)ஆடுகள் சாப்பிட்டால் தண்ணீர் தாகம் எடுக்காது என்று பெரிய தம்பி கூறுகிறார். அச்சு தழை புதர் செடியாகும்.

துரைச்சாமி
கிழக்குத்தெரு பள்ளப்பட்டி கிராமம்
நிலக்கோட்டை (தாலுகா)
திண்டுக்கல் மாவட்டம்
செல் – 9944484294

## பயன்படாத செல் போன் பேட்டரி மூலம் பல்பு எரிய வைத்தல்

வேலூர் மாவட்டம் அரக்கோணம் தாலுகா, திருத்தனியில், அரவிந்தன் (13) தற்பொழுது 9 ம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கிறார். அரவிந்தன் தனது வீட்டில் உள்ள எலெட்ரானிக் கால்குலேட்டர் போன்றவற்றை பிரித்து பார்த்து வருவதில் ஆர்வத்துடன் செயல்படுவார். இதில் கிடைத்த அனுபவத்தை கொண்டு தற்பொழுது பயன்படாத செல்போன் பேட்டரியின் மூலம் மின்சார பல்பு LED எரிய வைத்துள்ளார்.

கருவியின் முக்கிய பாகங்கள் ; பயன்படாத செல்போன் பேட்டரி – 1 , பயன்படாத LED லைட் – 1 நேர்மின், எதிர்மின் வயர் – 2 , பயன்படாத சார்ஜர் – 1 , பல்பு – 1 , சுவிட்ச் – 1 , டிரான்ஸ் பார்மர் – 1 .

செயல்படும் விதம்; டிரான்ஸ்பார்மரில் முதலில் நேர்மின் மற்றும் எதிர்மின் வயர்களை கொடுக்கவும். பின்பு இந்த வயரின் முனையில் பொருத்தப்பட்டுள்ள பல்பு எரியும் போது பேட்டரியின் மூலம் சார்ஜர் தானாகவே சார்ஜ்



ஆகிவிடுகிறது. ஒரு மணி நேரம் சார்ஜ் செய்தால் 4 மணி நேரம் LED பல்பு எரிய வைக்கலாம்.

பி.பீ. அரவிந்தன்
த/பெ. பால கிருஷ்ணன்
12 /24 , கம்பர் தெரு ,திருவள்ளுவர் நகர்
திருத்தனி – 631 209, செல் : 9047646063

## தீவன கரணை,விதை விநியோகம் செய்தல்

மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் வட்டம், வேடர் புளியங்குளம் எனும் கிராமத்தில் திரு. செந்தில் (40) வசித்து வருகிறார். இவர் 12ம் வகுப்பு வரை படித்துள்ளார். இவருக்குச் சொந்தமாக 3.5 ஏக்கர் நிலம் உள்ளது . இதில் சுமார் 1.5 ஏக்கரில் 0.4 – 05 என்ற தீவனச் சோளம் ரகமும், மல்லிகை மற்றும் நெல் பயிரிட்டு மகசூல் பெற்று வருகிறார். இவர் கடந்த 10 வருடங்களாக தீவனச் சோளம் பயிரிட்டு விவசாயிகளுக்கு விற்பனை செய்து வருகிறார். இவர் முதலில் கோயம்புத்தூர் வேளாண் பல்கலைக் கழகத்தில் கோ – 4 தீவன கரணை சுமார் 50 எண்ணம் மட்டும் விலைக்கு வாங்கி பயிரிட்டு தற்போது 1.5 ஏக்கர் வரை பயிரிடுகிறார்.

கரணை நன்கு வளருவதற்கு உழுது பின்னர் மாட்டுச்சாணம் 1 லோடு மற்றும் குப்பை போட்டு மண்ணை கிளறி விட்டு பின்னர் தண்ணீர் விட்டு சோளகரணை நடவு செய்கிறார். கரணையின் இடைவெளியாக 1 – 1.5 அடி க்கு 1 கரணை நடவு செய்கிறார். வாரத்திற்கு 2 நாட்கள் மட்டும் தண்ணீர் பாய்ச்சுகிறார். கரணை நட்ட 7 நாட்களில் சிம்பு அடித்து விடுகிறது. இதனால் செயற்கை உரங்கள் சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை. ஓர் ஏக்கருக்கு 20,000 கரணைகள் நடலாம். இவரிடம் கோ4, கோ3, கோ5,கோ தீவனச் சோளம் (CoFs 39, CoFs 31), வேலிமசால், முயல் மசால் மற்றும் அகத்தி விதைகள் உள்ளன. இவர் இது வரை சுமார் 15 லட்சம் – 20 லட்சம் கரணைகளை விவசாயிகளுக்கு ராமநாடு, பரமக்குடி, விருதுநகர், தேனி, மதுரை மற்றும் ஈரோடு மாவட்டங்களுக்கு தீவனக் கரணைகளை பயிரிட்டு விற்பனை செய்து வருகிறார். ஒரு கரணையின் விலை 75 பைசாவாகும்.

எஸ். செந்தில்
த/பெ. சுப்ரமணியம்
2/110, வடக்குத் தெரு
வேடர் புளியங்குளம்
திருப்பரங்குன்றம் தாலுகா
மதுரை மாவட்டம்
செல் – 9842189115

## காஞ்சிபுரம் மதியழகனின் பாத்திரம் கழுவும் இயந்திரம்

காஞ்சிபுரம் மாவட்டம் அய்யனார் குளம் எனும் கிராமத்தில் திரு. மதியழகன் (46) வசித்து வருகிறார். இவர் ஐடிஐ படித்து விட்டு தமிழ்நாடு மின்சார வாரியத்தில் 25 வருடங்களாக பணியாற்றி வருகிறார். இவரது சமையல் பாத்திரம் கழுவும் இயந்திரம் பற்றிய விவரம் பின்வருமாறு:

முக்கிய பாகங்கள்: மோட்டார் – 1/2 ஹெச்பி, பிரஸ்– 1, வாட்டர் லைன் – 1, வாட்டர் கப்– 1.

**வேலை செய்யும் விதம்**



முதலில் வாட்டர் கப்பில் தண்ணீரை நிரப்பி பின்னர் கப்பின் அடியில் பிரஸ்ஸை கட்டவும். பைப் லைனை வாட்டர் கப்பின் வழியாக இணைக்கவும். சுவிட்சை ஆன் செய்யும் போது தண்ணீர் பிரஸ்ஸின் வழியாக வழியும். அப்போது பாத்திரத்தை பிரஸ்ஸின் மேல் வைக்கும் போது பாத்திரம் கழுவப்படுகிறது. இந்த இயந்திரத்தினால் சுமார் 2–3 விநாடியிலேயே பாத்திரத்தை கழுவலாம். இந்த இயந்திரத்தின் விலை ரூ. 8000 ஆகும்.

வி. மதியழகன்
17, சுப்ரமணியன் கோவில் தெரு
அய்யனார்குளம்
காஞ்சிபுரம் மாவட்டம் – 631 502
செல் : 9047282979

## வெங்காயம் சேமிப்பில் புதிய உத்தி

திருப்பூர் மாவட்டம், உடுமலைப் பேட்டையில் சுபாஸ் கிருஷ்ணசாமி (65) விவசாயி வசித்து வருகிறார். இவர் +2 வகுப்பு வரை படித்துள்ளார். இவர் தக்காளி, மா, சப்போட்டா கொய்யா பயிரிட்டார். ஒரு சமயம் இவரது ஒன்னு விட்ட தம்பி நிலத்தில் வெங்காயம் அறுவடை செய்யப்பட்டது. அப்போது விலை அதிகமானதால் வெங்காயத்தை சேமிக்க முடிவு செய்யப்பட்டது. முன்பு போல பட்டறை போட்டு சேமிக்க தகுந்த மூங்கில், தட்டி மூங்கில் மற்றும் பாண்டு கற்கள் இல்லை, இதனால்

செலவு அதிகரித்தது. பழைய முறையில்: 100 மூடை பன்னவேண்டுமானால் 50–60 அடி படல் அமைக்க ரூ. 20,000 செலவாகும் . இதனால் வெங்காயத்தை அறுவடை செய்து தாளை அரியாமல் அப்படியே பரவலாக நிலத்திலே காயும்படி வைக்கப்பட்டது. வெங்காயம் வெயிலில் காய்ந்தால் விலை போகாது. தரம் குறையும். என்பதால் அப்படியே போடப்பட்டது. இதனால் பக்குவமாக வெங்காயம் சேமிக்க புதிய முறையில் 300 மூட்டைக்கு ரூ. 10,000 ஆனது. காயாமல் தாள் மட்டும் காய்ந்தது. நிலத்தில் தென்னை ஓலைகள் நீளமாக 5 அடி அகலம் (நீளம் எவ்வளவு வேண்டுமானாலும்) 3 அடி உயரத்திற்கு குவிக்கப்பட்டது. இதன் மேல் அறுவடை செய்யபட்ட காய்ந்த வெங்காயத் தாள் வெங்காயத்துடன் குவிக்க வேண்டும். இதற்கு மேல் தென்னை ஓலை வைத்து மூட வேண்டும். இந்த அமைப்பை கட்டு கம்பி வைத்து (நாற்புரமும் குச்சி நட்டு) கட்டி விட வேண்டும். இதனால் மழை பெய்தால் தண்ணீர் உள்ளே செல்லாமல் இருக்கும். இதிலிருந்து வழியும் தண்ணீரை இந்த அமைப்பை சுற்றி சுற்றிலும் வாய்க்கால் வெட்டி இதன் மூலம் தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. அதாவது பட்டறையில் விழும் மழைநீர் பாதுகாக்க ஏற்பாடு செய்கின்றார்கள். மெல்லிய கட்டுக் கம்பிகளைக் கொண்டு குறுக்கும் நெருக்குமாக கட்டி விட வீசும் காற்றிலிருந்து பாதுகாக்கலாம். இந்த மாதிரி 3 சேமிப்பு பட்டறைகள் அமைக்கப்பட்டு சுமார் 300 மூட்டை வெங்காயம் சேமிக்கப்படுகிறது. தற்பொழுது பட்டறை போட்டு 2 மாதங்களாகிறது. இப்போது சின்ன வெங்காயம் நன்றாக உள்ளது.

சுபாஸ் கிருஷ்ணசாமி
உரல்பட்டி (அஞ்சல்)
உடுமலைப்பேட்டை (தாலுகா)
திருப்பூர் மாவட்டம்
செல் – 9788115282

## மகாலிங்கத்தின் இயற்கை முறை நெல் சாகுபடி அனுபவம்

நாகப்பட்டிணம் மாவட்டம், தரங்கம்பாடி தாலுகா, புதுப்பாளையம் கிராமத்தில் திரு. மகாலிங்கம் வசித்து வருகிறார். இவருக்கு 2 ஆண், 3 பெண் உள்ளனர். இவர் 2 ஏக்கர் குத்தகை எடுத்துள்ளார். மேற்கண்ட முகவரியில் வசிக்கும் இவரது நிலம் கடந்த டிசம்பர் – 26, 2004 ம் ஆண்டு ஏற்பட்ட கடல் கொந்தளிப்பால் விவசாய நிலத்தில் கடல் நீர் உட்புகுந்து பாழடைந்து உள்ளதால் மதுரை சேவா நிறுவனத்தின் மூலம் கடந்த 2005 ம் ஆண்டு இயற்கை முறையில் இவ்விவசாயியின் நிலம் சீர் திருத்தம் செய்யப்பட்டது. முதலில் இவ்விவசாயியின் நிலத்திற்கு ஆடுதுறை –43 நெல் ரகம் 80 கிலோ கொடுக்கப்பட்டது. இவர் நாற்று பறித்து 2 ஏக்கர் நிலத்தில் நடவு செய்தார். நடவு செய்வதற்கு முன்னர் இயற்கை கலப்பு உரம் ஏக்கருக்கு 4 மூட்டை வீதம். 2 ஏக்கருக்கு 8 மூட்டை கொடுக்கப்பட்டது. நடவிற்கு முன்னர் இவ்வுரத்தை தெளித்து விட்டு நடவு செய்தார். நடவு செய்த 15 ம் நாள் பஞ்சகவ்யா ஏக்கருக்கு 3 லிட்டர் வீதம் 2 ஏக்கருக்கு 6 லிட்டர் 600 மி.லி பஞ்சகவ்யாவிற்கு 10 லிட்டர் நீர் என்ற அளவில் மாலை நேரங்களில் தெளிக்கப்பட்டது. பின் கதிர் வைக்கும் சமயம் 3 லிட்டர் பஞ்சகவ்யாவும் 3 லிட்டர் மூலிகை பூச்சிக் கொல்லி மருந்தும் (மூலிகை பூச்சிக் கொல்லி மருந்து தயாரிக்கும் விதம் : நொச்சி 1 கிலோ, சோற்றுக்கற்றாழை 1 கிலோ, வேப்பங்கொட்டை 1 கிலோ, எருக்கலை 1 கிலோ, பீநாரிச்சங்கு 1 கிலோ இலைகளை உரலில் ஆட்டி 3 நாட்கள் ஊறல் போட வேண்டும். பின்னர் வடிகட்டி 100 லிட்டர் நீரில் கலந்து ஒரு ஏக்கருக்கு தெளிக்க வேண்டும்) தெளிக்க கொடுக்கப்பட்டது. இம்மருந்து தெளித்த பின்னர் பூச்சிகள் எதுவும் தாக்கப்பட வில்லை. பயிர் நல்ல பசுமை நிறத்துடன் காணப்பட்டது. பஞ்சகவ்யா தெளித்த நெற்பயிரில் மகரந்த தூள் எண்ணிக்கை அதிகமாக காணப்பட்டன. 2005 ம் வருடம் ஏற்பட்ட புயலில் பயிர்கள் கொஞ்சம் சேதம் அடைந்தன. இவ்வருடம் இந்த விவசாயி மா – 1 க்கு 10 கலம் வீதம் பெற்றார். 1 ஏக்கருக்கு 30 கலம் – 15 மூட்டை வரை பெற்றார். 1 ஏக்கருக்கும் 30 மூட்டை வரை பெற்றுள்ளார். மாணிக்கப்பங்கு , எருக்கட்டாஞ்சேரி விவசாயிகளைக் காட்டிலும் 5 கலம் இவ்விவசாயி மகசூல் அதிகம் பெற்றார்.

தொகுப்பு ; அ. கருப்பசாமி, சேவா

## ஆசிர்வாதத்தின் இயற்கை முறை நெல் சாகுபடி அனுபவம்

நாகப்பட்டிணம் மாவட்டம், தரங்கம்பாடி தாலுகா, புதுப்பாளையம் கிராமத்தில் திரு. மகாலிங்கம் வசித்து வருகிறார். இவருக்கு 2 ஆண், 3 பெண் உள்ளனர். இவர் 2 ஏக்கர் குத்தகை எடுத்துள்ளார். மேற்கண்ட முகவரியில் வசிக்கும் இவரது நிலம் கடந்த டிசம்பர் – 26, 2004 ம் ஆண்டு ஏற்பட்ட கடல் கொந்தளிப்பால் விவசாய நிலத்தில் கடல் நீர் உட்புகுந்து பாழடைந்ததால் மதுரை

சேவா நிறுவனத்தின் மூலம் கடந்த 2005 ம் ஆண்டு இயற்கை முறையில் இவ்விவசாயியின் நிலம் சீர் திருத்தம் செய்யப்பட்டது. முதலில் இவ்விவசாயியின் நிலத்திற்கு ஆடுதுறை –நெல் ரகம் 43 விதை 80 கிலோ கொடுக்கப்பட்டது. இவர் நாற்று பறித்து அன்று நடவு செய்தார். நடவு செய்வதற்கு முன்னர் 1 ஏக்கருக்கு 4 மூட்டை , 2 ஏக்கருக்கும் 8 மூட்டை இயற்கை கலப்பு உரம் கொடுக்கப்பட்டது. இவ்வுரத்தை நடவு செய்வதற்கு 2 நாளைக்கு முன்னர் அடி உரமாக போடப்பட்டது. பின் நடவு செய்த 15 ம் நாள் பஞ்சகவ்யா ஏக்கருக்கு 3 லிட்டர் வீதம், 2 ஏக்கருக்கு 6 லிட்டர் பஞ்சகவ்யா கொடுத்து 600 மி.லி பஞ்ச கவ்யாவிற்கு 10 லிட்டர் நீர் என்ற முறையில் தெளிக்கப்பட்டது. பின் கதிர் விடும் சமயம் 3 லிட்டர் பஞ்சகவ்யாவும் 3 லிட்டர் மூலிகை பூச்சிக் கொல்லி மருந்தும் சேர்த்து மாலை நேரத்தில் தெளிக்கப்பட்டது. பஞ்சகவ்யா, மூலிகை பூச்சிக் கொல்லி மருந்து தெளித்த பின்னர் பூச்சி எதுவும் தாக்காமலும் பசுமை நிறத்துடனும் காணப்பட்டது. இவருடைய வயலில் 27/2/06 அன்று நெல் அறுவடைசெய்தார். நெல் மகசூல், மா– 1 க்கு 9 வீதம் பெற்றார். ஒரு ஏக்கருக்கு 27 வீதம் 13–1/2 கலம் பெற்றார். 2 ஏக்கருக்கு 27 கலம் மகசூல் பெற்றுள்ளார். மூட்டையில் 14 மூட்டை பெற்றுள்ளார். சுனாமி தாக்குவதற்கு முன்னர். 20 மூட்டை வரை மகசூல் பெற்றுள்ளார். கடந்த ஆண்டு சுனாமியினாலும், புயலாலும் பாதிப்பு அடைந்துள்ளதால், மகசூல் குறைந்து உள்ளது. இருந்த போதிலும் மற்ற பஞ்ச கவ்யா தெளிக்காத விவசாயிகளைக் காட்டிலும் இந்த விவசாயி மகசூல் அதிகம் பெற்று பயனடைந்துள்ளார்.

தொகுப்பு ; அ. கருப்பசாமி, சேவா

## கருக்கம்பாளையம் செல்லமுத்துவின் இயற்கை வேளாண்மை

ஈரோடு மாவட்டம் கருக்கம்பாளையம் கிராமத்தில் திரு. செல்லமுத்து (58) வசித்து வருகிறார். இவர் 5 ம் வகுப்பு வரை படித்துள்ளார். இவரது இயற்கை வேளாண்மை உத்திகள் பின்வருமாறு.

### நாட்டு வெங்காயத்தில் வரும் நோய்களை கட்டுப்படுத்த

இவர் கடந்த வருடம் 20 சென்ட் நிலத்தில் நாட்டு வெங்காயம் 65 கிலோ விதைத்தார். விதைக்கும் முன்னர் 1 லோடு டிராக்டர் குப்பை போட்டுள்ளார். வெங்கயாத்திற்கு ஊடு பயிராக மஞ்சள் பயிர் செய்துள்ளார். சின்ன வெங்காயத்தில் வேர் அழுகல் மற்றும் பேன் போன்ற பூச்சிகளின் தாக்குதல் அதிகமாகக் காணப்படும். இதனைக் கட்டுப்படுத்த விதைத்த 15 வது நாளில் மூலிகை பூச்சி விரட்டியும் ( 1 லிட்டர் பூச்சி விரட்டிக்கு 20 லிட்டர் தண்ணீர் கலந்து தெளிக்க வேண்டும்). அடுத்த 25 வது நாளில் பஞ்சகவ்யா (800 மி.லியுடன் 20 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்), அடுத்த 35 வது நாளில் பஞ்சகவ்யா (1/2 லிட்டருடன் 20 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்), அடுத்த 45 வது நாளில் பஞ்சகவ்யா (400 மி.லியும் பூச்சி விரட்டி 400 மி.லியுடன் 20 லிட்டர் தண்ணீர் சேர்த்து) தெளிக்கவேண்டும். அமிர்த கரைசல் 20, 27, 40, 50 வது நாட்களில் 20 லிட்டர் தண்ணீருடன் கலந்து விடவும். ரசாயனம் உரம் போட்டால் 600–700 கிலோ மட்டுமே மகசூல் 20 சென்டில் கிடைக்கும். ஆனால் இவரது இயற்கை வேளாண்மையில் 800 கிலோ காய் கிடைத்தது.

வருமானம் : 20 சென்ட் நிலத்தில் நாட்டு வெங்காயம் பயிரிட்டால் கிடைக்கும் வருமானம் எவ்வளவு என்று கணக்கிடப்பட்டது. 1 லோடு டிராக்டர் குப்பை ரூ. 2,300, வேலை ஆட்கள் கூலி ரூ. 300, அறுவடை கூலி ரூ. 600, 65 கிலோ விதை நாட்டு வெங்காயத்தின் விலை ரூ. 2,700, மொத்த செலவு ரூ. 5,900. மகசூல் 850 கிலோ நாட்டு வெங்காயம் 1 கிலோ வெங்காயத்தின் விலை ரூ. 40. 850 x 40 = ரூ.34,000.

நிகர லாபம் ரூ. 28,900 . இது ரசாயன வேளாண்மை செய்தால் கிடைக்கும். லாபத்தை விட மிக அதிகமாகும்.

கே.எம். செல்லமுத்து
கருக்கம்பாளையம்
ஊஞ்சலூர் (அஞ்சல்)
கொடுமுடி (வழி) ,ஈரோடு மாவட்டம்
செல் – 9486602389

**திரு. செல்லமுத்து இயற்கைமுறையில் பஞ்சகவ்யா, மூலிகை பூச்சிக்கொல்லி மருந்து தயாரித்து விநியோகிக்கின்றார்.** – ஆசிரியர்

## வாசகர் வட்டம்

### ஊட்டசத்து மாவு

தாங்கள் கேட்டுக் கொண்டதன் படி கர்பிணி பெண்களுக்கு கொடுக்கும் ஊட்டசத்து மாவு (mothers special nutritional powder ) 5 பாக்கெட் அனுப்பியிருக்கிறேன். கர்ப்பம் ஆனதிலிருந்து குழந்தை பிறக்கும் வரை ஒரு கர்பிணிப் பெண்ணுக்கு எனது ஸ்பெசல் சத்துணவு மாவு கஞ்சியை சாப்பிடச்

சொன்னேன். 10 மாதங்களும் தொடர்ந்து சாப்பிட்டு அழகான 31/2 கிலோ எடை உள்ள ஆரோக்யமான குழந்தையை அந்தப் பெண் பெற்றெடுத்தார். இது எனக்கு மிக சந்தோஷமாக இருந்தது. தற்போது தஞ்சாவூரில் நிறைய டிஜிஓ மருத்துவர்களும் கூட கர்பணிகளுக்குப் பரிந்துரைக்கின்றனர். மேலும் தாய் பால் சுரக்க இந்த ஊட்டசத்து மாவு பயன்படுத்தப்படுகிறது. இதில் கலந்துள்ள ராகி அதிகமான கால்சியத்தை கொடுக்கிறது. பனிவரகு மார்பு புற்று நோயைத் தடுக்கிறது. முருங்கைக்கீரை அபரிதமான இரும்பு சத்தை கொடுக்கிறது. இதை புட்டாகவும், கஞ்சியாகவும், கூழாகவும் மிளகு போட்டு சூப்பாகவும், களியாகவும் செய்து அவரவர்க்கு பிடித்த சுவையில் சாப்பிட்டுக் கொள்ளலாம். மேலும் தாய்ப்பால் கொடுத்து முடிந்த பிறகு அந்தத் தாயின் எடை அதிகரித்திருந்தாலும் தளர்ந்திருந்தாலும் உடலை சீராக செய்யவும் உதவுகிறது. எனக்கு சேவா மூலம் ஜனாதிபதி மாளிகையில் சிருஷ்டி சம்மான் விருது பெற்றது பெருமையாக உள்ளது.

இரஜேஸ்வரி ரவிக்குமார்
2/314, காருகுடி மெயின் ரோடு
திருவையாறு – 613 204
செல் :9488574308
செல்: 9443163206

## நஞ்சில்லா விளைபொருள் உற்பத்தியாளர்கள் சங்கம்

எங்கள் பகுதியில் நஞ்சில்லா விளைபொருள் உற்பத்தியாளர்கள் சங்கம் ஆரம்பித்து 36 உறுப்பினர்கள் இயற்கை வேளாண்மை கடைபிடித்து வருகிறோம். இயற்கையாக விளைந்த காய்கறிகளை விற்பனை செய்து வருகிறோம். இந்த காய்கறிகளுக்கு நாங்களே வாட்ஸ் அப்பில் போட்டு செய்தி கொடுத்து விலை நிர்ணயம் செய்கிறோம். ஒரு கிலோவுக்கு ரூ.5 சேவைக்கட்டணமாக விவசாயிகளிடமிருந்து வாங்கப்படுகிறது. இதன் மூலம் போக்குவரத்து, ஆள்கூலி, நிர்வாகச் செலவுகளுக்கு சங்கத்திலிருந்து பணம் கொடுக்கிறோம். விளைபொருட்கள் சென்னை, திருப்பூர், கோவை, திருவனந்தபுரம் போன்ற பகுதிகளுக்கு வேன், லாரிகள் மூலம் அனுப்புகிறோம். காய்கறிகள் தவிர மஞ்சள்தூள், கரும்புசர்க்கரை, புளி, தேங்காய் எண்ணெய் என 40 வகையான பொருட்களை விநியோகம் செய்து வருகிறோம். காய்கறிகளில் முக்கியமாக பாகல், பீர்க்கை, புடலை, வெண்டை, கத்தரி, வாழை, முருங்கை, அரசாணி, பூசணி, சுரைக்காய் மற்றும் பப்பாளி விற்பனை செய்கிறோம்.

வி. வேலுச்சாமி, உயிராற்றல் பண்ணை
2/227, நீலித் தோட்டம் ,தண்டுக்காரன்பாளையம், சேவூர் வழி ,அவினாசி தாலுகா,திருப்பூர் மாவட்டம் – 641655
செல் –9842553068

## பெரம்பலூர் பாரம்பரியம்

நெல்லுக்கு பாரம்பரிய விதை நேர்த்தி : பெரம்பலூர் பகுதியில் நெல்லுக்கு பாரம்பரிய முறையில் விதை நேர்த்தி செய்யப்படுகிறது. நெல்லுக்கு செங்காரை என்ற குலை நோய் வருவதால் நெல் பயிர் பாதிக்கப்படும். இதனை கட்டுப்படுத்த பாரம்பரிய விதை நேர்த்தியை கடைபிடித்து வருகின்றனர். ஒரு சாக்கில் 3–4 குப்பைமேனி செடி, 4 கைப்பிடி வாதநாராயண தழை எடுத்து கொள்ளவேண்டும். இதன் மேல் வைக்கோல் 1/2 அடிக்கு பரப்ப வேண்டும். வைக்கோலுக்கு மேல் காய்ந்த மாட்டு எரு 1/2 அடி பரப்ப வேண்டும். பின்னர் இதற்கு மேல் விதை நெல்லை போட வேண்டும். விதை நெல்லுக்கு மேல் மேலே கூறிய படி குப்பைமேனி, வாத நாராயண தழை, வைக்கோல், எரு முறையே இட்டு சாக்கை இறுகக் கட்டி விட வேண்டும். இந்த நெல் மூட்டையை தண்ணீர் உள்ள தொட்டியில் வைத்து மேலே கல் வைத்து விட வேண்டும். இதனை 24 மணி நேரம் வைத்து விட்டால் நெல் முளை கட்டும். இந்த முளை கட்டிய விதைகளை நாற்றங்காலில் நாற்று பாவ விதைக்க வேண்டும்.

மாட்டுக்கு குந்து வந்தால் அசை போடாது. இதற்கு முடக்கத்தான் தழையை மாடு கழுத்தில் சுற்றவும். ஒரு சட்டி எடுத்து அதில் கருவாட்டு தலை, பூண்டு தோல் ஆகியவற்றை நெருப்புடன் சேர்த்து புகைபிடிக்க வேண்டும். தலைவலிக்கு கஸ்தூரி மஞ்சள் கிழங்கை தண்ணீர் கொண்டு இழைச்சு பத்து போட வேண்டும். நீர் கோர்த்து இருந்தால் சரியாகிவிடும். நெருஞ்சி முள் தழை, குப்பைமேனி தழை, வயனார் கொழுந்து தழை, (வாதநாராயணன்) வேப்பந்தழைகொழுந்து, முஷ்டக்கீரை வதக்கி சாப்பிட வேண்டும். பண்ணைக்கீரையும் சேர்த்துக் கொள்ளலாம். இதனை புரட்டாசி, ஐப்பசி மாதங்களில் சாப்பிட உடம்பிற்கு நல்லது. விவசாயிகள் தங்கள் தோட்டங்களை சுற்றி பேய் முருங்கை போத்துக்களை நடுவர். இது தழைத்து மரமாகும். இதன் தழையை வெட்டி நெல் வயலுக்கு பசுந்தாள் உரமாக இடுவர்.

நந்தினிதேவி, பெரியம்மாபளையம்
பெரம்பலூர் மாவட்டம், செல்: 9787567610

## ஜமன்லால் பஜாஜ் விருது 2015

கிராம முன்னேற்றத்திற்கு சேவை செய்து வரும் சமூக பணியாளர்களுக்கும் மற்றும் வெளிநாட்டில் காந்திய கொள்கையில் பணியாற்றி வருபவர்களுக்கும் ஒவ்வொரு வருடமும் ஜமன்லால் பஜாஜ் விருது வழங்கப்படுகிறது. பரிசுத்தொகை ரூ. 10 லட்சமும், சான்றிதழும் வழங்கப்படும். நான்கு நபர்களுக்கு 4 துறைகளில் பரிசுகள் வழங்கப்படும். இதை மும்பாயிலுள்ள ஜமன்லால் பஜாஜ் பௌண்டேசன் வழங்கி வருகிறது. 2015ம் ஆண்டிற்கு கீழ்க்கண்ட 4 நபர்கள் தேர்வு செய்யப்பட்டு டிசம்பர் 1 ம் தேதி மும்பாயில் விருது வழங்கப்படவுள்ளன. இந்த விருதுகளை காந்திஜியின் பேரன் ராஜ்மோகன்காந்தி அவர்கள் வழங்குவார்கள்.

1) காந்திய நிர்மாணப் பணியில் ஈடுபட்டு வரும் சர்வோதய ஊழியர் திரு. மான்சிங் ராவத், உத்தரக்கண்ட் மாநிலம் . 2) அறிவியல் தொழில்நுட்ப பணியில் ஈடுபட்டு வரும் சமூகபணியாளர் திரு. பெ.விவேகானந்தன், சேவா, தமிழ்நாடு . 3) பெண்கள் முன்னேற்றத்திற்கு பாடுபட்டு வரும் சமூகசேவகி திருமதி. அன்னி பெர்ரார், ஆர்.டி.டி, ஆந்திரா. 4) வெளிநாடுகளில் காந்திய கொள்கையை கடைபிடித்து பணியாற்றும் பேராசிரியர் மினோரு கசை, இன்டர்நேசனல் கிறிஸ்துவ பல்கலைகழகம், ஜப்பான்.

2016 ம் ஆண்டிற்கான விண்ணப்பங்கள் விண்ணப்பிக்க கடைசி தேதி 15.01.2016. விண்ணப்பங்கள் கீழ் கண்ட இணையதளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**www.jamnalalbajajfoundation.org**

மேலும் விவரங்களுக்கு

Jamnalal Bajaj Foundation
Bajaj Bhavan, Jamnalal Bajaj Marg,
226 Nariman Point , Mumbai - 400021
Phone- 022-2202-3626
Email-info@jamnalalbajajfoundation.org

## சுயமாக உருவாக்கப்பட்ட பசுமைத் தொழில் நுட்பங்கள், கண்டுபிடிப்புகள் & பாரம்பரிய அறிவைக் கண்டறியும் 10 வது சுற்றுப்போட்டி

“தேசிய கண்டுபிடிப்பு நிறுவனம் – இந்தியா” தனது 10 வது சுற்றுப்போட்டிக்கு சுயமாக உருவாக்கப்பட்ட புதிய கண்டுபிடிப்புகள், சிறந்து விளங்கும் பாரம்பரிய அறிவு , உத்திகள் வரவேற்கப்படுகின்றன. இந்த பசுமைத் தொழில்நுட்பங்கள் யாருடைய உதவியில்லாமல் சுயமாக அடித்தள மக்களால் அதாவது விவசாயிகள், கைவினைஞர்கள், மீனவர்கள், பெண்கள், சேரியில் குடியிருப்போர், லேத் பட்டறையில் வேலை செய்யும் பணியாளர்கள், மெக்கானிக்குகள், மாணவர்கள் போன்றவர்களால் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். இந்த கண்டுபிடிப்புகள் வேளாண்மை, இயந்திரங்கள், வீட்டு உபயோக சாதனங்கள், எரிசக்தி மற்றும் மின்சக்தியில் சேமிப்பு அல்லது உற்பத்தி செய்தல், போக்குவரத்து , புதிய பயிர் ரகங்கள், மூலிகை வைத்தியம் (மனிதர்களுக்கு மற்றும் கால்நடைகளுக்கு) , வேலைப்பழுவை குறைக்கும் கண்டுபிடிப்புகள் மற்றும் இது போன்ற செலவை குறைத்து நீடித்து பயன்படும் பசுமைத் தொழில்நுட்பங்கள் அடிப்படையில் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். கண்டுபிடிப்புகள் மட்டுமின்றி கண்டுபிடிப்பை வடிவமைப்பதற்கான யோசனைகளும் உத்திகளும் கூட வரவேற்கப்படுகின்றன. பாரம்பரிய அறிவை பாதுகாத்து வைத்துள்ளோர் , பெண்கள், மாற்றுதிறனாளிகளின் கண்டுபிடிப்புகளுக்கும் சிறப்பு விருதுகள் வழங்கப்படும். அனைத்து பிரிவுகளிலும் இளங்கலை பட்டப்படிப்பு வரை படித்தவர்கள் அல்லது இதற்கு குறைவாக படித்தவர்கள் மற்றும் படிப்பறிவு இல்லாதவர்களின் சுயமாக உருவாக்கப்பட்ட கண்டுபிடிப்புகள் மட்டும் பரீசிலினை செய்யப்படும். பரிசுதொகை ரூ. 10,000 லிருந்து ரூ, 7, 50, 000 வரை ஒவ்வொரு பிரிவிலும் வழங்கப்படும். மொத்தப்பரிசுத் தொகையில் 35–52 சதவீதம் சிறந்த முதல் 3 கண்டுபிடிப்பாளர்களுக்கு வழங்கப்படும்; 15 சதவீதம் கண்டுபிடிப்பாளரின் எந்தவொரு சமுதாய முன்னேற்றப்பணிக்கும் வழங்கப்படும். இப்போட்டிக்கு கண்டுபிடிப்பாளர்களை அடையாளம் பார்த்து தொகுக்கும் தனிநபர்கள், நிறுவனங்களும் கௌரவிக்கப்படுவார்கள். அடித்தள கண்டுபிடிப்புகளை மேன்மைப்படுத்தி மதிப்பு கூட்டும் வல்லுநர்கள், கண்டுபிடிப்புகளை ஊக்கப்படுத்தும் பத்திரிக்கையாளர்கள் அல்லது மின் ஊடகத்து தகவல்லுநர்களும் கௌரவிக்கப்படுவார்கள். **தொகுப்புகள் வந்துசேர வேண்டிய கடைசி நாள் 31 . 3 . 2017**

**தொகுப்புகளை அனுப்ப வேண்டிய முகவரி**

National Innovation Foundation - India
Satellite Complex , Premchand Nagar Road
Ahmedabad – 380 015 , Gujarat ,
Ph : 079 – 267302456 , 267302095
Email - campaign@nifindia.org
Website - www.nif.org.in